Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 49
ஞாயிற்றுக்கிழமை
14 ஜனவரி 2024
மார்கழி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"ஓநாய் வருகுது ஓநாய் வருகுது எண்ட மாதிரி ஒருநாள் உண்மையாவே உந்தாள் எலக்சன் வைக்கிறன் எண்டாலும் ஒருத்தரும் நம்பாயினம் கண்டியளோ"

# தேசிய அரசாங்கமே ரணிலின் திட்டம்!



## ஏப்ரலில் முக்கியமான முடிவுகள்

**கொழும்பு, ஜனவரி 14**

**ஜனாதிபதித் தேர்தலில், தான் வெற்றியடைவார் என உறுதியாக நம்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலின் பின்னர் தேசிய அரசொன்றை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.**

15

# டெங்குக்கு ஏதுவான சூழல்; இனி வழக்குகள் பாயும்!

யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு தொற்றுப் பரவுவதற்கு ஏதுவான சூழலைக் கொண்டுள்ள குடியிருப்புகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் எந்தவித பாரபட்சமும், தயக்கமும் இல்லாமல் வழக்குத்தாக்கல்

15

## டெங்குத் தொற்றுத் தீவிரம்

# விசேட நிபுணர்கள் குழு யாழ்ப்பாணத்தில் ஆய்வு!

## ஆளுநரும் களத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று தீவிரமாகப் பரவி வரும் நிலையில், டெங்குக் கட்டுப்பாட்டுப் பணிகளில் தேர்ச்சிபெற்ற குழுவினர் (பல மாவட்ட மருத்துவர்களையும் உள்ளடக்கிய குழு) யாழ்ப்பாண நகரப்

15



# சுதந்திரதினத்தின் பின் தேர்தலுக்கு வாய்ப்பு!

## தயார்நிலையில் இருக்குமாறு சகாக்களுக்கு ரணில் உத்தரவு

கொழும்பு, ஜன. 14
இலங்கையின் சுதந்திர தினத்துக்குப் பின்னர் எந்நேரத்தில் வேண்டுமானாலும் தேசிய மட்டத்திலான தேர்தலொன்று நடத்தப்படலாம் எனவும், அதனை எதிர்கொள்ள தற்போதிருந்தே தயாராகுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது

15

## சர்வதேசநீதிமன்றில்

# இஸ்ரேல் – ஆபிரிக்கா காரசாரமான விவாதம்!

ஜொகன்ஸ்பேர்க், ஜன. 14
காஸாவில் இஸ்ரேல் இனவழிப்பில் ஈடுபடுகின்றது என்று குற்றஞ்சாட்டிய தென்னாபிரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ள நிலையில், இந்த வழக்கு தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றது.
சர்வதேச நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய தென்னா

15

## அத்துமீறிய மீன்பிடி

# 13 தமிழக மீனவர்கள் காரைநகரில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 14
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக, 13 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15

# தேசிய பொங்கல்விழா இம்முறை மலையகத்தில்

கொழும்பு, ஜன. 14
தேசிய பொங்கல் விழா இம்முறை மலையகத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.
நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஹற்றன் டன்பார்க் மைதானத்தில் தேசிய பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

15

## இராணுவத்தின்

# உழவியந்திரம் மோதி குடும்பத்தலைவர் சாவு!



கொழும்பு, ஜன. 14
வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடிப் பகுதியில் இராணுவ உழவு இயந்திரத்துடன் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இளம்

15

# யாழ். வருகிறது ஐ.எம்.எப். குழு!

## பலதரப்பு சந்திப்புக்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 14
இலங்கைக்கு வருகைதந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழு இன்று யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது. வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உள்ளிட்ட பல தரப்பினருடனும் நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சந்திப்பில் ஈடுபடவுள்ளனர்.

15

# வெளிநாடு அனுப்புவதாக பல இலட்சங்கள் மோசடி!

## யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.14
வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பல இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாண மாவட்டக் குற்ற விசார

15

சஞ்சீவி

Jaffna International Trade Fair
14 Edition
JANUARY ஜனவரி
19 20 21
JITF 2024
இன்னும் 5 நாட்களில்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகரத்தில். சிவன்கோவிலுக்கு அருகில். செட்டித்தெருவில். பங்குக் கிணற்றுடனும். சுவாமிப் படம் வைத்துள்ள சிறு கோவிலுடனும் கூடிய 4 பரப்பும் 2.88 குளியில் அமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.
பார்வையிடும் நேரம்: தை மாதம் 16 ஆம். 17ஆம் திகதி முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

**075 566 4422, 077 617 6623**

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மரிய லீனா யூஸ்ரஸ் தி.கு**

மாதகலை சொந்த இடமாகக்கொண்டவரும். சிங்கப்பூரில் பிறந்தவரும். யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மரிய லீனா யூஸ்ரஸ் தி.கு (12.01.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (16.01.2024) செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 07.30 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் திருப்பலி ஒப்பக்கொடுக்கப்பட்ட பின்னர். யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி.**
**121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 27555) S-1

## தேவை

கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள Digital printing office க்கு Digital Printing Machine Operator தேவை. ஓரளவு Graphic Designing . தெரிந்து இருந்தால் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
call / whatsapp
0777322133, 0781837084

## விற்பனைக்கு

வால்டிங் வேலைக்கான பாவனை செய்யப்பட்ட உபகரணங்கள் எம்மிடம் விற்பனைக்குள்ளது.
(Transformers, Composer, Grinder, Drill, Cut of machine, Straight Grinder, Scaffolding Sets, Rammer, Bench Drill, Brass Hinges, Wiring Materials and etc.)

தொடர்புகளுக்கு:
**077 307 5545**

(CS 27559) S-1

## காரியாலய இடம் வாடகைக்கு

4816 சதுர அடிகொண்ட காரியாலய கட்டடம் யாழ். கன்னாதிட்டி வீதியில் வாடகைக்குண்டு. (யாழ்நகர்பகுதி) காரியாலயங்கள் அல்லது காட்சியறைக்கு பொருத்தமானது.

**077 911 6050**

## தெல்லிப்பளை இந்து இளைஞர்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

**எதிர்வரும் 21.01.2024ம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சங்கப் பணிமனையில் விசேட பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.**

**இணைச்செயலாளர்.**

(CS 53517) S-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 03 . 1987



இறப்பு 13 . 01 . 2024

## திருமதி சிந்துஜா மதுசன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர், RDHS, கிளிநொச்சி)

யாழ்ப்பாணம், திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிந்துஜா மதுசன் அவர்கள் *13.01.2024* சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் கலாநிதி *A.A.* சூசை ஆனந்தன் (ஓய்வுநிலை பேராசிரியர் - யாழ். பல்கலைக்கழகம்) மற்றும் சுசீலாதேவி (ஓய்வு நிலை ஆசிரியை - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) தம்பதியினரின் அன்பு மகளும், மகேஸ்வரன், நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் செந்தூரன், திருமகள் அவர்களின் அருமைச்சகோதரியும் மதுசன் அவர்களின் பாசமிகு மனைவியும் இரகுநந்தனன் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் *14.01.2024* ஞாயிற்றுக்கிழமை அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்.
*0771992209*

## பணிப்பெண் தேவை

யாழ்நகரிலுள்ள பெண் வைத்தியரின் வீடொன்றில் தங்கியிருந்து பணிசெய்ய ஒரு பணிப்பெண் தேவை. அனுபவமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

தொடர்பு : **077 616 0338**

## வீடுகள் வாடகைக்கு

யாழ் நகரில் வீடுகள். கடைகள். களஞ்சியசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கான அறைகள். சுற்றுலாப்பயணிகளுக்கான நாளாந்த. வாராந்த வீடுகள். அறைகள் எம்மிடம் உண்டு. அத்தோடு யாழ்ப்பாணத்தில் எப்பாகத்திலும் வீடுகள் வாடகைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

**077 345 0039, 077 348 0039**

## விற்பனைக்கு

யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 10 பரப்பு காணியும். 06 பரப்பு காணியும். கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் 6 பேர்ச்சில் அமைந்த மாடி வீடும் கொழும்பு கல்கிசை ரெம்பிள் றோட்டில் 10 பேர்ச்சர் காணியும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

## ஹோட்டல் வேலைவாய்ப்பு

தெஹிவளையில் பிரபலமான ரெஸ்டூரண்டிற்கு ரொட்டி மேக்கர் (Rotti maker) தேவை. உணவு. தங்குமிடம் இலவசம். சம்பளம் நாளொன்றுக்கு 3500 முதல் 4000வரை

**தொடர்புகளுக்கு:**
**077 730 7868**

## விற்பனைக்கு

இணுவிலில் கே.கே.எஸ் வீதியை முகப்பாகக் கொண்ட 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 227 6181**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். இந்துக் கல்லூரி அருகில் சகல வசதி .களுடன் வீடு வாடகைக்கு உண்டு
முற்பணம் – 100000.00 வாடகை – 25000.00

**தொடர்பு:- 076 333 8311**

## வேலையாட்கள் தேவை

உணவகம் ஒன்றுக்கு கொத்து, றைஸ், நாசி போடத் தெரிந்தவர்கள் தேவை. உணவு பரிமாறுபவர்கள் தேவை ((ஆண், பெண்

**0625 203 077**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை (வெ) சேர்ந்த. 1992 பிறந்த சொந்தமாகத் தொழில் புரியும் .மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை

**தொடர்பு கோல் வட்ஸ்அப்**
**7724 338 075**

## தேவை

தனியார் நிறுவனத்துக்கு தகுதியான ஆண் அல்லது பெண் செயலாளர் தேவை. ஆங்கிலம், தமிழ் எழுதுதல், வாசித்தல், பேசுதல் அறிவு புலமை தேவை. கணினி அறிவு மேலதிக தகைமையாக இருத்தல் நன்று. தகுதியான சம்பளம் .வழங்கப்படும்

**தொடர்பு - 077 298 7583**

## ஆங்கில வகுப்பு

நல்லூர் பிரதேசத்தில் ஆங்கில வகுப்பு வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தரம் 1 - O/L வரை அடிப்படையில் இருந்தும் கற்கலாம். **T.P.076 112 4145**

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள மரத் தளபாடங்கள். இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சணல் மறி ஆடு. டோமன். பொம்மரியன். பொக்கட்டோக் ஒருவருடமாக வளர்த்த நாய்கள் அத்துடன் நாய்க்கூடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : **076 830 7424**

## உடனடி வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கம்பனிக்கு முகாமையாளர்கள். அலுவலக உத்தியோகத்தர்கள் தகுதி உடையவர்கள் தேவை.

தொடர்பு : **076 112 4145**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றுக்கு கனரக வாகன சாரதி தேவை.
வயது - 20 - 45

**076 096 9728, 076 096 9734**

## தேவை

யாழ் நகரில் உள்ள சட்டத்தரணி அலுவலகத்தில் தமிழ் Typing செய்வதற்கு பெண் தேவை.

தொடர்புகளுக்கு: **076 578 9372**

## விற்பனைக்கு

ஹொட்டல் பாவனைக்குரிய சில்வர் பாத்திரங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டி. சோக்கேஸ் மற்றும் நாய்க்கூடு ஒன்று விற்பனைக்குண்டு.
17. விதானையார் வீதி. சுண்டுக்குளி.

தொடர்புகளுக்கு: **077 623 8129**

## ரைப்பிங் செய்து தரப்படும்

சிங்கள ரைப்பிங் (Typing) செய்து தரப்படும்.

**077 233 6267**

## கூறுவிலை கோரல்

றக்கா வீதியில் அமைந்துள்ள கடைத் தொகுதியும் அதனுடன் அமைந்த வீடு ஒன்றையும் முற்றாக அகற்றுவதற்கு கூறுவிலை கூறப்படுகிறது.

**077 103 47308, 077 913 4325**

## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு 18-50 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு: **077 152 0156**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**தேவை**

புடவைக் கடைக்கு அனுபவம் உள்ள பெண்கள் வேலைக்குத் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
வயதெல்லை 18-30
இடம் - கொக்குவில்

**077 351 4774**

**கடை வாடகைக்கு**

கல்வியங்காடு மூன்றாம் கட்டையிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

**077 175 0746**

# உரம் விலை குறையும்

கொழும்பு, ஜன.14

தேயிலை பயிர்ச்செய்கைக் குப் பயன்படுத்தும் ஒரு மூடை உரத்தை 8 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்ய விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது ஒரு மூடை உரம் 12 ஆயிரம் முதல் 14 ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. (எ-இ)

**அறை வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் தொழில் புரியும் மற்றும் கல்விகற்கும் ஆண்களுக்கு அறை வாடகைக்குண்டு.

**077 640 8830**

**காணி, வீடு விற்பனை**

தைபிட்டியில் 70 பரப்பு,
தெல்லிப்பளையில் 4பரப்பில் உள்ள வீடும் விற்பனைக்கு

தொடர்பு : 077 601 1135

# இறுவெட்டு, நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜன.14

விஞ்ஞான ஊக்கியின் 10 ஆவது ஆண்டு விழாவும் ஸ்ரீ சாஸ்தாபீட இறுவெட்டு நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சித்தங்கேணி வடலியடைப்பு ஸ்ரீ சாஸ்தா திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வண். நாவலர் மகா வித்தியாலய அதிபர் க.கலியுகன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாதசுந்தரன் பங்கேற்கவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம், புதுக்குடியிருப்பு பதவி வெற்றிடம்

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் இயங்கும் கட்புலன், செவிப்புலன், பேச்சுத்திறன் குன்றிய மாணவர்கள் வதியும் இனியவாழ்வு இல்லத்திற்கு கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை பூரணப்படுத்தி எதிர்வரும் 31.01.2024ம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ "தலைவர், இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம் "அ" பகுதி, புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**பதவி:- முகாமையாளர்:- (வெற்றிடம் 01)**

- வடமாகாண எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதியன்று 40 வயதுக்கு குறையாதவராகவும், 62 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஏதாவது துறையில் பட்டம்பெற்றவராக இருத்தல் வேண்டும். அல்லது அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் 15 வருடம் பொறுப்புவாய்ந்த பதவிகளில் சேவையாற்றியவர்களாக இருத்தல் வேண்டும்.
- நல்லொழுக்கமுடையவராகவும், இல்லத்தை தொடர்ச்சியாக வழிநடத்தி செல்லக்கூடிய உடற்தகுதியைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலமொழியில் ஓரளவு தேர்ச்சிபெற்றவராக இருத்தல் வேண்டும்.
- கட்புலன், செவிப்புலனற்ற பிள்ளைகள் தொடர்பாக அறிவு மற்றும் சமூகசேவைகளில் ஈடுபாடுகொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளக்கொடுப்பனவு 32265/ என்னும் அடிப்படைக் கொடுப்பனவுடன் இல்லத்தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

குறிப்பு:- சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நிழற்பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

**தலைவர்,**
**இனிய வாழ்வு இல்லம்.**

(CS 53511) S-1

# மணிவிழா வாழ்த்துக்கள்

## திரு. வல்லிபுரம் கனகரத்தினம்

**ஆசிரிய ஆலோசகர் (விசேடகல்வி)**
**தென்மராட்சி கல்வி வலயம்**

Best Wishes



**நாவற்காடு வரணியில் பிறந்து வரணி மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று 17.08.1988 இல் ஆசிரியப் பணியில் சேர்ந்து 11.01.2012 இல் ஆசிரிய ஆலோசகராகி, பல்வேறு கோணத்தில் கல்விச் சேவையாற்றி வாழ்க்கைக் கட்டமைகளை சிறப்புறச் செய்து 14.01.2024 இல் பணியிலிருந்து ஓய்வுபெறும்** உங்களையும் உங்கள் சேவையையும் பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலம் சிறப்பாகவும் நிம்மதியாகவும் நோய் நொடியற்ற வாழ்க்கையாகவும் மேலும் பல சந்தோசங்களைப் பெற்று குடும்பத்துடன் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்ன்றோம்

Congratulations

*வாழ்த்துவோர்:*

**இராஜேஸ்வரன் குடும்பம் - கரவெட்டி**
**பாஸ்கரன் குடும்பம் - கரவெட்டி**
**சுகுமாரன் குடும்பம் - சுவிஸ்**
**ஜெகதீஸ்வரன் குடும்பம் - லண்டன்.**

PickMe




மகிழ்ச்சியும் சௌபாக்கியமும்
நிறைந்த இனிய
தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

உங்கள் வாகனங்களை இணைக்க 0774737737

Download Now | Google play | App Store | AppGallery

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH
14th EDITION
Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி
19 20 21
10.00மு.ப - 8.00பி.ப
Muttraweli Grounds
(Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

DIMO

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் அனுசரணையில் தமிழ்விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பினூடாக 125 பேருக்கு பொங்கல் பொருள்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமார், சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் பொங்கல் பொருள்களை வழங்கி வைத்தனர். (ரி-110)

# ஐயன்கன்குளத்துக்கு நோயாளர்காவு வண்டி

## பொதுமக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜன.14**

**முல்லைத்தீவு, ஐயன்கன்குளம் மருத்துவமனையின் நோயாளர்காவு வண்டியைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முல்லைத்தீவுப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஐயன்கன்குளத்தில் 250 குடும்பங்களும், புத்துவெட்டுவானில் 90 குடும்பங்களும், பழையமுறிகண்டியில் 40 குடும்பங்களும், கோட்டைகட்டியகுளத்தில் 150 குடும்பங்களும் இந்த மருத்துவமனையையே நம்பியுள்ளனர். இந்த மருத்துவமனைக்கு வாரத்தில் 5 நாள்கள் மல்லாவியில் இருந்து மருத்துவர் வருகின்றார். மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டி இல்லாததால் 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி மருத்துவமனைக்கு அவசர நோயாளர்கள் செல்லமுடியாதுள்ளது. மக்களின் நலன் கருதி நோயாளர் காவு வண்டியை சேவையில் ஈடுபடுத்தவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

# மன். மருத்துவமனையில் டெங்குக்கு ஏதுவான சூழல்

## உடன் தடுக்குமாறு மாவட்டச் செயலர் அறிவுறுத்து

மன்னார், ஜன.14

மன்னார் பொது மருத்துவமனை வளாகம் உரிய கண்காணிப்பின்றி எளிதில் தொற்றுநோய்கள் பரவும் ஏதுநிலையில் காணப்படுகின்றது. மருத்துவமனையின் வளாகம் சுத்தமாகப் பேணப்படுவதற்கு சுகாதாரப் பிரிவினர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற டெங்குத் தடுப்பு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமாக கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

16 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை மிக மோசமான முறையில் பேணப்படுவதாகவும் அங்கு டெங்கு நோய் மிக எளிதாகத் தொற்றக்கூடியதான சூழல் காணப்படுகிறது என்றும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே சுகாதாரத் தரப்பினர் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து மூன்று தினங்களுக்கு சிரமதானம் மேற்கொள்ள ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேவேளை மருத்துவமனையில் நிலவும் சுத்திகரிப்பாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-60)

# கோழி இறைச்சி விலையில் சரிவு

மன்னார், ஜன.14

மன்னார் மாவட்டத்தில் இறைச்சிக் கோழிகளின் விலைகள் சடுதியாகக் குறைந்துள்ளன என்று கோழி இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு கிலோ இறைச்சிக் கோழி ஆயிரத்து 360 ரூபாவாகவும், முட்டைக் கோழி ஆயிரத்து 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-56)

# இரணைமடுக்குள பொங்கல்விழா!

கிளிநொச்சி, ஜன.14

இரணைமடுக்குளத்தின் 104ஆம் ஆண்டு பொங்கல்விழா எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. கனகாம்பிகைக்குளம் ஆலய முன்றிலில் 104 பானைகள் வைத்து கலை, பண்பாட்டு நிகழ்வுடன் பொங்கல் நடைபெறவுள்ளது.

இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் தலைவர் வி. நடராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-13)

# தடை நீக்கப்படாது

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் அணைக்கட்டு வழியாக வாகனங்கள் செல்வதற்கான தடை தொடர்ந்து நீடிக்கப்படும் என்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை. பிரகா தெரிவித்துள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் வவுனிக்குளம் அணைக்கட்டு வழியாகப் பயணித்த வாகனமொன்று குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 3 உயிரிழப்புகள் நிகழ்ந்தன. அதையடுத்து அணைக்கட்டு வழியாக வாகனங்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது. அணைக்கட்டு வழியாக வாகனங்கள் பயணிக்கின்றபோது அணைக்கட்டு சேதமடையும் நிலை காணப்படுவதால் இந்தத் தடை தொடர்ந்து நீடிக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-13)



# மடுமாதா அன்னை பங்குகளில் தரிசனம்

மன்னார், ஜன.14

முடிசூட்டப்பட்ட மடு அன்னையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு அன்னை ஆலயப் பங்குகளுக்கு கடந்த 7ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதிவரை தரிசனம் செய்து வருகிறார். கடந்த வியாழக்கிழமை எட்டாவது பங்கான கீழியன்குடியிருப்புக்கு பங்குக்கு பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் அடிகளார் தலைமையில் அன்னையின் திருச்சொரூபம் எடுத்து வரப்பட்டது. இதில் பெருமளவான அடியவர்கள் பங்கேற்று அன்னையின் ஆசீர்வாதம் பெற்றனர். (ச-60)

# அரியாலை சனசமூகத்தின் பவளவிழாக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.14

அரியாலை சனசமூக நிலையம் தனது 75 ஆவது ஆண்டு பவளவிழாவையொட்டி இந்த ஆண்டின் ஒவ்வோர் மாதத்திலும் விசேட நிகழ்வுகளைக் கொண்டாடவுள்ளது.

இதில் மாபெரும் இசை, நாடக, நடன நிகழ்வுகளுடன் மாபெரும் இலக்கிய விழாவும் நடத்தப்படவுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

# வீதியில் கால்நடைகள் கட்டப்பட்டால் அபராதம்

## வலி. மேற்குப் பிரதேசசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.14

வீதிகளில் கால்நடைகளைக் கட்டி மக்களது போக்குவரத்துக்கு இடையூறாகச் செயற்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வலி.மேற்குப் பிரதேசசபையின் செயலாளர் சண்முகராஜா பாலரூபன் தெரிவித்தார்.

கால்நடைகள் வீதியில் கட்டப்படுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புக்குச் செல்லும் மாணவர்களும் வீதியில் கட்டப்படும் கால்நடைகளால் அச்சமடைகின்றனர்.

வீதியில் கட்டப்படும் கால்நடைகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு, தண்டம் அறவிட்ட பின்னரே உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-27)

# பொலிஸார் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன.14

காங்கேசன்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, அச்சுவேலி பொலிஸார் இணைந்து வடமராட்சியில் யுக்திய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# நாடு எரிகையில் பிடில் வாசிக்கும் ஆட்சியாளர்கள்

இலங்கையில் ஆட்சியில் இருந்த - இருக்கும் அரசாங்கங்களின் - அரசியல் தலைமைகளின் பிற்போக்கான கொள்கைகளே நாட்டின் இன்றைய வங்குரோத்து நிலைமைக்குக் காரணம். கடந்த காலங்களில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்களே அதற்கு முற்றுமுழுதாகப் பொறுப்பேற்கவேண்டும் என்கின்றபோதும், சாதாரண மக்களின் தலைகளிலேயே அதன் சுமை ஏற்றப்பட்டிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி ஜனாதிபதிப் பதவியை கையகப்படுத்திக் கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதார மீட்சியில் அக்கறை கொண்டவராகவே தன்னைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றார். அதிகார ஆசை அற்றவராகவும் - நாட்டின் மீட்பராகவும் தன்னைக் காண்பித்துக் கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சும் - செயலும் வெவ்வேறாகவே இருக்கின்றன. நாட்டு மக்களின் மீது வரி மேல் வரியாக விதித்து நாட்டின் மீட்சிக்காக அவற்றையெல்லாம் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று பாடமெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - வீணடிக்கும் மக்கள் வரிப்பணம் பற்றி வாய் திறக்காமலேயே இருக்கின்றார். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு தனது அரசியல் பயணத்தை - ஜனாதிபதித் தேர்தல் களத்துக்கான முன்னாயத்தப் பயணத்தை நாட்டு மக்களின் வரிப்பணத்தில் படை பட்டாளத்தோடு மேற்கொண்டிருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இப்போது அவருக்குச் சற்றும் சளைக்காதவர்கள் என்று காட்டியிருக்கின்றனர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் அவரது சகாக்களும். துறைமுக அதிகாரசபையின் இரு கப்பல்களில் நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்தியிருக்கின்றனர் அவர்கள்.

பொருளாதார நெருக்கடியால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து மூன்றுவேளை உணவு உண்பதே பெருங்காரியம் என்ற நிலைமைக்கு ப்பெரும்பாலான குடும்பங்கள் தள்ளப்பட்டிருக்கின்றன. பல சிறார்கள் தங்கள் கல்வியைத் தொடர முடியாத இக்கட்டு நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். ஆனால் நாட்டின் இந்த நிலைமைக்குக் காரணமானவர்கள் என்று நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டவர்கள் - நாட்டின் இந்தநிலைமைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தற்போதும் உல்லாச வாழ்க்கையே வாழ்கின்றனர். நாட்டின் நலனுக்காக அனைத்தையும் சகித்துக் கொள்ளவேண்டும் என்று நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறுபவர்களும் அவற்றைக் கண்டும் காணாமலேயே விட்டுவிடுகின்றனர்.

மக்களால் என்ன செய்துவிட முடியும் என்ற இறுமாப்பும் - எப்படியானாலும் எம்மைத்தானே மீண்டும் மீண்டும் தெரிவு செய்வார்கள் என்ற நம்பிக்கையுமே அரசியல் தலைமைகளின் இந்தப்போக்குக்குக் காரணம். கடந்தகாலங்களில் பொதுநலனைச் சிந்திக்காது - பேரினவாத -இனவாத வலையில் வீழ்ந்து மக்கள் மீண்டும் மீண்டும் அதிகாரக் கதிரைகளில் ஏற்றியதன் விளைவே இது. நாடு முன்னேற வேண்டுமானால் அரசியல் தலைமைகளின் இந்தப்போக்கு மாற வேண்டும். அது மக்களின் கைகளிலேயே இருக்கின்றது. நாடு பற்றி எரியும்போது பிடில் வாசிப்பவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை.

# சுகாதாரத்துறை ஊழியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு!

**கொழும்பு, ஜன.14**

**மருத்துவர்கள் தவிர்த்து அனைத்து சுகாதாரத்துறை ஊழியர்களும் நாளை திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று மருத்துவ சேவைகள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது**

சுகாதாரத் துறையில் உள்ள 27 தொழிற்சங்கங்களுடன் இணைந்து இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது என்று மருத்துவ சேவைகள் ஐக்கிய முன்னணியின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக கடந்த வியாழக்கிழமை மருத்துவமனையில் நோயாளர்களுக்கு இரவுநேர உணவு நள்ளிரவே வழங்கப்பட்டது என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லான தெரிவித்தார். (எ-இ)

## சுவிஸ்க்கு ரணில் பயணம்

கொழும்பு, ஜன.14

உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுவிற்சர்லாந்துக்குப் பயணமாகியுள்ளார். மாநாட்டில் பங்கேற்கும் ஜனாதிபதி உலக தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த வருடம் உலகப் பொருளாதார மாநாட்டில் இலங்கை பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயணத்தின் பின்னர் உகண்டாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவும் ஜனாதிபதி நாட்டுக்குப் பயணம் செய்கின்றார். எதிர்வரும் 24 ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்புவார். (எ-44)

## சுற்றுலாத்துறைக்கு 6 பில்லியன் டொலர்

### டயானா எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜன.14

சுற்றுலாத்துறை மூலம் 6 பில்லியன் டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் 6 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 106 வீதம் அதிகரித்துள்ளது - என்றார். (எ-26)

## விசாரணை ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய பீடத்தின் இரண்டாம் வினாத்தாள் வெளியான சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி நடந்த விவசாய பாடத்தின் இரண்டாம் வினாத்தாளுக்கான பரீட்சை இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## இலங்கையின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜன.14

செங்கடலுக்குக் கப்பலை அனுப்பும் இலங்கையின் தீர்மானம் தொடர்பில் மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலுடனான பாதுகாப்பு உடன்படிக்கைகளின் அடிப்படையிலேயே அமெரிக்காவும் பிரிட்டனும் செங்கடலில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன ஏனைய நாடுகள் அவ்வாறு செயற்படவில்லை என மேற்காசியநாடுகளின் தூதுவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

**நாளை**

15.01.2024

திங்கட்கிழமை

தை 01

சுபநேரம் : 12.34 – 02.04

ராகுகாலம் : 08.04 – 09.34

தைப்பொங்கல்

**நாளொரு நல்வார்த்தை**

உங்களது மூளையானது
இந்த ஆகாயத்தை விட
பரந்து விரிந்த ஒன்று.

- எமிலி டிக்கின்ஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 95 சதவீதப் பெண்கள் நுண்கடனால் பாதிப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.14**

**நுண்கடன் திட்டங்களால் 95 சதவீதப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் உரிய காரணிகள் இன்றி வெறும் நுகர்வுக்காகக் கடன் பெற்றுள்ளனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகைக் கடன் வழங்கும் நிறுவனங்களைக் கடுமையாக ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகக் கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள நுண்கடன் திட்டங்களைக் கண்காணிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு முதல் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒரு சில நுண்கடன் திட்ட நிறுவனங்களால் 360 சதவீத வட்டி அறவிடப்படுகிறது.


பெரும்பாலானோர் முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஏதும் இல்லாமல் வெறும் நுகர்வுக்காகவே கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். பெரும்பாலானோர் கடன் பத்திரத்தின் நிபந்தனைகளைக் கூட அறிய வில்லை - என்றார். (எ-இ)

## ஜப்பான் நிதியமைச்சர் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 14

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை ஜப்பான் நிதியமைச்சர் சுசூகி ஷீனிச்சி உள்ளிட்ட ஜப்பான் தூதுக் குழுவினர் வருகை தந்துள்ளனர்.

நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகைதந்த ஜப்பான் நிதியமைச்சர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடினார். (ச-44)



## சண்டிலிப்பாய் பிரிவில் தொடர் டெங்குத் தடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டுச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமமட்ட அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்று தொடர் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது டெங்கு அபாயமுள்ள வீடுகள் மற்றும் இடங்கள் பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களுக்கு டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுகளும் வழங்கப்படுகின்றன. (ச-66)

## கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக மற்றுமொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

மருந்துக் கொள்வனவின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடியின் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டார் என்பது உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை முன் வைத்தே குறித்த பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஏற்கனவே முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. எனினும், தற்போது வேறு சில மோசடிகளும் இடம்பெற்றுள்ளன எனத் தெரிய வந்துள்ளதால் சிலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். (ம-44)

## கடலில் விருந்துபசாரமல்ல கண்காணிப்புப் பயணமே

### முட்டுக்கொடுக்கிறது அதிகாரசபை

கொழும்பு, ஜன. 14

25 இலட்சம் ரூபா செலவளித்து நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்தப்பட்டது எனக் கூறப்படுபவை போலியான கட்டுக்கதைகளே. இதற்கு நாம் எந்தவொரு செலவையும் பொறுப்பேற்கவில்லை என்று துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவிக்கையில்,

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்திக் கொண்டாடினர் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது விருந்துபசாரம் அல்ல, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்காணிப்புப் பயணம் என்று பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தக் கண்காணிப்புப் பயணத்துக்கு எரிபொருள் உட்பட மொத்தம் 3 இலட்சம் ரூபா எனது சொந்தப் பணத்திலேயே செலவழிக்கப்பட்டது. - என்றார். (ச-44)



## சுகாதாரத் திட்டங்கள் மீளாய்வுகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 14

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் அமைச்சின் செயலாளர் ம.ஜெகூ தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் இந்த வருட வேலைகள், வாகனப் பராமரிப்புகள், நிர்வாகம் சார்ந்த விடயங்கள், நிதி சார்ந்த விடயங்கள் மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன ஆராயப்பட்டன.

அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர், பிரதம கணக்காளர் உள்ளிட்டோர் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ச-66)

# பெரமுன கூட்டணி ஆட்சியமைக்கும்!

## சந்திரசேன எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, ஜன. 14

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே அடுத்த தேர்தல்களில் வெற்றி நடைபோடும்.

எனினும், வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. வெற்றி வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார். இது விடயத்தில் கட்சி எடுக்கும்முடிவுக்கு கட்டுப்படுவேன்.

அடுத்த பொதுத்தேர்தலிலும் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே வெற்றி பெறும். எமதுதான சேறுபூசலை துடைத்தெறிவோம் - என்றார். (ச-44)




மன்னார், நானாட்டான் பிரதேசசெயலக புதிய பிரதேச செயலாளராக திருமதி சிவசம்பு அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றார். (ச-75)



வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலகத்தால் ஆதனவரி (சோலைவரி ) அறவீடு தொடர்பான நடமாடும் சேவை கந்தரோடை கலைமதி சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவல்தெய்வமான ஆஞ்சநேயரின் ஜெயந்தி உற்சவம் கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட விஷ்ணு ஆலயங்களில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.
வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடேஷ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் இந்த உற்சவக் கிரியைகள் ஆலய பிரதமகுரு செ.ரமணீதரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. பல பகுதிகளிலிருந்து வருகைதந்த பக்தர்கள் நெய் தீபமேற்றி வழிபட்டனர். (ச-27)

# கிணற்றுநீரில் ம.எண்ணெய் ஆய்வறிக்கை சமர்ப்பிக்குக

## முல்லை நீதிமன்று பணிப்பு

**முல்லைத்தீவு, ஜன. 14**

**உடையார்கட்டு - குரவில் கிராமத்தில் கிணறொன்றில் அவதானிக்கப்பட்ட மண்ணெண்ணெய் கசிவு தொடர்பில் கனியவள எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிணற்றின் உரிமையாளரால் கிணறு இறைக்கப்பட்டபோது கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் முல்லைத்தீவு நீதிமன்றில் பதிவு செய்யப்பட்ட வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-19)



# நூல் வெளியீடும் அமுத விழாவும்

போராளி எழுத்தாளரும், மாவீரருமான கப்டன் மலரவனின் தாயார் மலரன்னையின் அமுதவிழாவும், மலரன்னையின் வாழ்வும் படைப்பும் நூல் வெளியீடும் கடந்த திங்கட்கிழமை திருநெல்வேலியில் ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், உளவளத் துணையாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் ஜீவநதி ஏற்பாட்டில் நடைபெற்றது.
நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் வேல்நந்தகுமார் ஆற்றினார்.
நூலின் முதல்பிரதியை ஜீவநதி இதழின் ஆசிரியர் கலாமணி பரணீதரன் வெளியிட்டு வைக்க மலரன்னை நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். (ச-66)



# பிரிட்டன் இளவரசி - ஜனாதிபதி சந்திப்பு

## சந்திரிகாவும் பங்கேற்பு

இலங்கைக்கு 3 நாள் பயணம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரிட்டன் இளவரசி, கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இளவரசி ஆன் உள்ளிட்ட பிரித்தானியத் தூதுக்குழுவை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி வரவேற்றார்.
இந்தச் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்த்தன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். (ச-26)

# மூடப்பட்டுள்ள 6 பாடசாலைகளை மக்கள் கோரினால் இயங்க வைக்கலாம்

## கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

*கிளிநொச்சி, ஜன. 14*

கிளிநொச்சி, பூநகரியில் மூடப்பட்டுள்ள 6 பாடசாலைகளை இயங்க வைப்பதற்கு கிராம மக்களிடமிருந்து கோரிக்கை கிடைக்கப்பெற்றாலே நடவடிக்கை எடுக்கமுடியும் என்று கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்துள்ளார்.
பூநகரியில் 6 பாடசாலைகளும் தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளன.
போர்ச்சூழல் மற்றும் மக்கள் இடம்பெயர்வால் அவை மூடப்பட்டன.
குறித்த பாடசாலைகளை மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இயக்க முடியும். ஆனால், பாடசாலைகளை இயங்க வையுங்கள் என்ற கோரிக்கை கிராம மக்களிடமிருந்து கிடைக்க வேண்டும். இதேவேளை - கிளிநொச்சி, உதயநகர் மேற்கில் புதிய ஆரம்பப் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பரிந்துரை செய்துள்ளோம். இதுவரை அனுமதி கிடைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-13)

# ரின்மீன் இறக்குமதி நிறுத்தம்

உள்ளூர் ரின் மீன் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் ரின்மீன் இறக்குமதி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
'நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 'வற்' மற்றும் செஸ் வரிகள் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன்களுக்கு நிகரான விலையில் தமது பொருள்களை வழங்க முடியாதுள்ளது. அதனால் எமது தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது' என்று ரின்மீன் உற்பத்தியாளர்கள் அமைச்சரிடம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தனர்.
இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வரும்வகையில் ரின்மீன் இறக்குமதியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார். (ச-இ)



# விவேகானந்தர் குருபூசை தினம்

வவுனியா, ஜன. 14

வவுனியாவில் சுவாமி விவே கானந்தரின் 161ஆவது குரு பூசை தினம் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.
வவுனியா புகையிரதநிலைய வீதியிலுள்ள சுவாமி விவேகானந்தரின் சிலையருகே இந்த நிகழ்வு இடம்பெற்றது.
இதன்போது சுவாமி விவேகா னந்தரின் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. (ச-110)



# பிரதேச செயலர் பதவியேற்பு

யாழ்ப்பாணம் ஜன.1ச

கிழக்கு மாகாண சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி சிவகங்கை சுதீஸ்னர் தெல்லிப்பழை பிரதேச செயலராக கடந்த வியாழக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
தெல்லிப்பழை பிரதேச செயலராக இதுவரைகாலமும் கடமையாற்றிய ச. சிவஸ்ரீ கோப்பாய் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இதயசுத்தி இல்லாவிடின் நல்லிணக்கம் ஏற்படாது!

## கூட்டமைப்பு எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 14

நல்லிணக்கம் என்பது மனங்களில் இருந்து எழவேண்டும். சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்க கொண்டு வரப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவுகளால் நாடு சுபீட்சம் காணாது. நல்லிணக்க விடயத்தில் இதயசுத்தியுடன் நடவடிக்கை அமைய வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு தேவையற்றது.
வடக்கு - கிழக்கில் ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன. தமிழ் அரசியல் கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை. சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துங்கள். மந்திரத்தால் மாங்காய் விழாது - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடம்பரத்தில் ரணில்!

## அநுர குற்றச்சாட்டு



ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்களுக்காக 2024 ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 200 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது. எதற்காக இந்தப் பகட்டு ஆடம்பரம்? என்று நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க. அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்றத்தில் குறை நிரப்பு பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டு ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள், வாகனப் பராமரிப்பு உள்ளிட்ட செலவுகளுக்காக மேலதிகமாக 200 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது. 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் வெளிநாட்டு பயணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் எதற்காக மேலதிக நிதி?- என்றார். (ச-44)


# Immediate Vacancy
## Jaffna Office

### Regional Officer

All-In-One Study Abroad and Immigration firm is opening its new office in Jaffna, Sri Lanka. We are a leading study abroad and immigration consulting firm in Sri Lanka and now looking for enthusiastic candidates for our new office in Jaffna for immediate placement.

The right candidate must have
- Minimum A/L qualification
- Good command of English written and oral.
- Minimum one year experience in administrative

If you feel that you are the right candidate we are looking for, please forward your resume in Pdf format to Email: info@canadalk.com

# வேலையாள் தேவை

SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனத்திற்கு கணினி (Computer operator) MS Office வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் தேவைப்படுவதால் வேலை தேடுவோர் எதிர்வரும் 16/17/18 ஆம் திகதிகளில் சுய விபரத்துடன் நேரில் வரவும்.

முகாமையாளர்,
SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்,
இல 154 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2991, 021 492 5838

(CS 53503) S-1

All-In One Study Abroad and Immigration

# Informational Session

JAN 27TH
10.00 AM
Gnanams Hotel
299, 301
Clock Tower Rd,
Jaffna

**Our Speakers**

In-Person:
Mukunthan T
MBA(USA), BComm(Hons) - University of Jaffna
Education Consultant for Canada

Via Zoom:
Kokulan B
BSc(Eng, Canada)
Regulated Canadian Immigration Consultant

**Talks**

Are you interested to study and work in Canada and USA?

We are so excited to bring these opportunities to our country.
- Study Abroad USA & Canada
- Immigration Services to Canada (Skills Immigration)
- Postgraduate Medical Training in the USA
- Path to practice medicine in Canada
- Practice nursing in Canadian Provinces
- IELTS preparation.

info@canadalk.com

Please reserve your seats at WhatsApp: + 1587 998 9661

Another Session Starting at 1p.m. For Healthcare Workers including doctors, nurses and medical students



நெஞ்சை விட்டகலாதா எம் இதய தெய்வத்தின்
# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை அரவணைப்பில்
23.02.1951

ஆண்டவன் அரவணைப்பில்
02.06.2006



## திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி
திதி : வளர்பிறை திருதியை (14.11.2024)

அம்மா ! அம்மா!
முத்தான கண்கள் இருவரை
முத்தமிட பெற்றெடுத்தீர்
பக்குவமாய் தான் வளர்த்து
பாரினிலே பரிமறிக்க
பாதை தன்னை அமைத்தீரே
பாசமுள்ள தாயாக வாழ் நாளில் வசந்தமுடன்
வையத்தில் நாம் வாழ
வழிவகுத்து வைத்தீர்ரே
வைரங்கள் நாம் இரண்டும் பிரிவான
செய்திகேட்டு பெரும்துயரம் தான் கொண்டேம்
மருமகன்களையும் பேரக்குழந்தைகளையும்
காணாமல் இறைவனிடம் சென்றீரே!
வாடுகிறோம் உமை நினைத்து என்றும் இறைவன்
திருவடியில் இளைல்லாத எமது
வைரங்களுடன் மருமகன்களும் பேரக்குழந்தைகளும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

இல. 110, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.
077 420 2896

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் - கிளிநொச்சி
கல்வி அமைச்சு

SLGTI

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2024

# NVQ Level-04

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/ பெண் இரு பாலாரிடமுமிருந்து 2024ம் வருட அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/பெண் இரு பலரிடமுமிருந்து 2024ம் வருட அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. (அ) **வயது**– 2024.02.28ம் திகதியன்று 16 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்

(ஆ) **கல்வித் தகைமை -**

க.பொ.த.(சா / த) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

குறித்த துறைசார் தேசிய தொழிற்தகைமை மட்டம்-3(NVQ/Level-3) சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**விஷேட திறமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு**

புத்தாக்கங்களில் ஈடுபட்டு தேசிய / மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழினை வைத்திருப்போரின் விண்ணப்பங்கள் விஷேட கவனத்திற் கொள்ளப்படும்.

**02. பயிற்சிநெறி போதனை மொழி**

எல்லா பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும். க.பொ.த.(சா / த) ஆங்கில அறிவு இப்பயிற்சிகளைத் தொடர்வதற்கு போதுமானது. உமது ஆங்கில அறிவினை அபிவிருத்தி செய்வதற்கான விஷேட ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்படும்.

**03. நுழைவுத் தேர்வு**

தேவையான தகைமைகளையுடைய. கீழே 04ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரி மாத்திரம் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) **பரீட்சைக்கான மொழி:** தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்.
(ஆ) **பரீட்சை நிலையங்கள்.**

அனுமதிக்கான எழுத்து மூலப் பரீட்சை, கிளிநொச்சி / கொழும்பு / கண்டி /மட்டக்களப்பு / மாத்தறை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சைகள் இரத்து செய்யப்பட்டு நீங்கள் விரும்பும் மற்றைய பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவீர்.

**எழுத்து மூலப் பரீட்சை**

கணிதம். அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு. பொது அறிவு. ஆங்கிலம் மற்றும் வரைதல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**04. பரீட்சைக்கட்டணம்**

விண்ணப்பதாரிகள் ரூபா 500/- ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கி கிளையில் கீழேயுள்ள கணக்கிற்கு வைப்பிலிட்டு. அதன் பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**கணக்கு:** கணக்காளர். இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவகம். கிளிநொச்சிக் கிளை கணக்கு இலக்கம் 048-1-001-8-0086726.

அழிந்து போன. மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**05. ஆரம்பத் தேர்வு முறை**

எழுத்துமூல பரீட்சையில் ஆகக்கூடுதல் புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியில் இருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின் தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி நிர்வாகத்தின் தீர்மானத்திற்கேற்ப குறைக்கப்படும்.

**06. இறுதித்தேர்வு**

நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுவோர்கள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகளும் கவனத்திற்கொள்ளப்படும்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் தேவையாயின் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

**07. பயிற்சி நெறிகள் (NVQ – Level 4)**

| S.No | Course | Duration |
|---|---|---|
| 01 | Automobile Mechanic | 02½ years |
| 02 | Agriculture Machinery and Equipment Technician | 02½ years |
| 03 | Electrician | 02½ years |
| 04 | Machinist | 02½ years |
| 05 | Welder | 02½ years |
| 06 | Baker + Laboratory Assistant (Food & Technology) | 02½ years |
| 07 | Draft Person + Quantity Surveying | 02½ years |
| 08 | Construction Site Supervisor +Surveying Field Assistant | 02½ years |
| 09 | ICT Technician + Computer Hardware & Network Technician | 02½ years |

முதல் ஒரு மாத அடிப்படை பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் துறை தேர் பரீட்சையில் நீர் பெற்ற புள்ளிகள். ஆற்றல்கள் மற்றும் உமது விருப்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே உமது துறை தெரிவு செய்யப்படும்.

**08. பிணைமுறி கைச்சாத்திடல்**

அனைத்து பயிலுனர்களும் இ.ஜே.ப.நிறுவனத்தில் பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

**09.விண்ணப்பித்தல்**

மாதிரி விண்ணப்பப் படிவத்தை இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும் (www.slgti.ac.lk) அதனுடன்

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (ஆ) கல்விச் சான்றிதழ்

(இ) இலக்கம் 1இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். (இருந்தால் மட்டும்)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இணைய வழி மூலம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முழு நேரப் பயிற்சிநெறிக்கு பயிலுனர்களைச் சேர்த்தல் 2024" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்.**

* www.slgti.ac.lk என்னும் இணையத்தளத்திலிருந்து
* நிறுவனத்திற்கு சமுகமளிப்பதன் மூலம்.

**10. விண்ணப்ப முடிவுத்திகதி**

விண்ணப்பங்கள் 2024.02.28ம் திகதி அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு அதிபர் அவர்கட்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**11. பரீட்சை அனுமதிப் பத்திரம்**

தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2024.03.17ம் திகதியளவில் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப் பெறாதவர்கள் இத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலை பேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்க.

"நிபுனதா சிசு சவிய" திட்டத்தின் கீழ் மாதாந்தம் ரூபாய் 4000/- உதவுத்தொகையாக பயிலுனர்களுக்கு வழங்கப்படும்.

**வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பயிலுனர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும்.**

**குறிப்பு: பயிற்சி நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும்.**

**அதிபர்,
இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்,
அறிவியல் நகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல:- 0214927799, தொலைபேசி இல:- 0703060138**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகத்தில்
டெங்கு தடுப்பு

## மூவருக்கு ரூ. 5,000 தண்டம் ஐவருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஜன. 14

மல்லாகத்தில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 8 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையில் 3 வளாகங்களின் உரிமையாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். நீதிமன்றுக்கு சமுகம் தராத ஐவருக்கு அழைப்பாணை விடுவித்து உத்தரவிடப்பட்டது. (ச-125,9)

## வண்ணையம்பதி ஏகாதசி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.14

வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடேஷ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் தை மாத சர்வ ஏகாதசி உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

வரதராஜப் பெருமாள், சீதேவி, பூமாதேவி உள்ளிட்ட பரிவாரத் தெய்வங்களுக்கு தீபாராதனைகளுடன் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. உற்சவத்தில் பல பாகங்களிலிருந்து வருகை தந்த பக்த அடியார்கள் பங்கேற்று அருட் கடாட்சத்தைப் பெற்றனர். (ச-27)

## நேரடி பஸ்சேவை நடத்துக!

முல்லைத்தீவு - துணுக்காயிலிருந்து அக்கராயன் - பூநகரி வழி யூடாக யாழ்ப்பாணத்துக்கு நேரடி பேருந்து சேவையொன்றை நடத்துங்கள் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்.நகருக்கான பேருந்து சேவைகள் துணுக்காயிலிருந்து மாங்குளம் வழியாகவே செல்கின்றன. துணுக்காயிலிருந்து அக்கராயன் பூநகரி வழியாக யாழ்ப்பாணத்துக்கான நேரடி பேருந்து சேவை இடம்பெறுவதில்லை. இதனால் துணுக்காயிலிருந்து அக்கராயன் - பூநகரி வழித்தட மக்கள் கிளிநொச்சி நகர் சென்றே யாழ்ப்பாணம் செல்லவேண்டியுள்ளது. எனவே குறித்த வழித்தடத்தில் பேருந்து சேவையை நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-13)


### பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை

யாழ். பல்கலைக்கழகம் அருகில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் கடமையாற்ற பெண் உதவியாளர் தேவை. முன் அனுபவம் தேவையில்லை பயிற்சி வழங்கப்படும்.
சுய விபரக்கோவையை **076 220 6863** என்ற **Whatsapp** இலக்கத்திற்கு அனுப்பவும்.
**மாதாந்த சம்பளம்: 40000/- வழங்கப்படும்.**
(CS27616) A-1

### Study Globe ( 30 countries)

**OPEN DAY 20 Jan 24( 10am to 4pm)**
**பதிவு கட்டணம் இல்லை ( no registration Fees)**

உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை தொடர நீங்கள் கனவு காண்கிறீர்களா. ஆனால் எங்கு தொடங்குவது என்று தெரியவில்லையா? உங்களுக்கான சரியான வாய்ப்பை நாங்கள் பெற்றுத்தருகின்றோம்". 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எங்களின் **OPEN DAY** விழாவில் பொங்கல் சலுகையாக உங்கள் பல்கலைக்கழகவாய்ப்புகள் (Offers) இலவசமாகப்பெறுங்கள்!" (spot assessment) இச் சலுகையை தவறவிடாதீர்கள்!

**2,500 பல்கலைக்கழகங்கள், 30 நாடுகள், 600,000 பாடநெறிகள்**

*குறைந்த ஆங்கில அறிவு உள்ளமாணவர்களையும் கருத்தில்கொள்வோம்.

- Terms & condition apply No. advance payment

**நிகழ்வு நடைபெறும் இடம் :**
**Talent Globe Pvt Ltd**
**(inside DTPE campus)**
**100, 2nd,Floor, Jaffna,**
**Manipay - Karainagar Road, (KKS Road Junction)**

**Jaffna. call 076 160 4383**

### வீடு விற்பனைக்கு

கொழும்பு -13
கொட்டாஞ்சேனை
இல 51 அல்விஸ்
பிளேஸ் இல்
**34 பேர்ச்சஸ் இரு மாடி**
கொண்ட வீடு
தனியான அனெக்சுடன்
விற்பனைக்கு உண்டு.
கண்டிப்பாக தரகர்கள்
வேண்டாம்
**077 206 1206**
(CS 27171) S-1

### ஆண் பராமரிப்பாளர் தேவை

**ஊரிக்காடு வல்வெட்டித்துறையில்**
ஐந்து வருடங்களிற்கு மேலாக இயங்கி
வருகின்ற **"வல்வை முதியோர் இல்லத்திற்கு"**
முதியோரை பராமரிப்பதில்
அனுபவமுள்ள ஆண்
பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு: **077 810 6857**
**077 154 2067**
**021 226 5551**

### தேவை

நீண்டகால குத்தகைக்கு வர்த்தகக் கட்டடங்கள்
ஒரு பிரபல கார்ப்பரேட் நிறுவனம், தரை மாடியில் குறைந்தபட்சம் 1000 - 1500 சதுர அடி இட வசதி கொண்ட காணிகளை / கட்டடங்களை தேடுகிறது. காணிகள் மற்றும் கட்டட நிர்மாணத்திற்காக நிதி வசதிகள் ஒழுங்கு செய்யப்படலாம்.
வடமாகாணம் - 0777 956 802
மாவட்டங்கள் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா
கீழ் மாகாணம் - 0773 384 981
மாவட்டங்கள் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை
தலைமை அலுவலகம் : அழைப்பு /whatsapp
**0777 006 197, 0777 730 437**
(CR 41539) S-1

### மீண்டும் ஆரம்பமாகும் இலவச மருத்துவ ஆலோசனைகள்

**தாமதமடையும் குழந்தை பாக்கியத்திற்கான சிகிச்சை முறைகள் தொடர்பான ஆலோசனைகள்**

**கொழும்பு நியூலங்கா மகப்பேற்று மருத்துவ** நிலையத்தைச் சேர்ந்த
மகப்பேற்று பெண் நோயியல்
மகத்துவ நிபுணர்
**Dr.G. சுஜாகரன்**
அவர்கள் இலவச மருத்துவ
ஆலோசனைகளை யாழ்நகரில்
ஆரம்பிக்கவுள்ளார்.



**இடம்: IVF CLINIC**
**15/3, முதலாம் ஒழுங்கை,**
**பருத்தித்துறை வீதி, யாழ்நகரம்.**

**திகதி : 19.01.2024 வெள்ளிக்கிழமை**
**நேரம் : 10.00 மணி - மாலை 6.00 மணிவரை**
தொடர்பு:
**077 766 7528, 077 755 0949**


### மரண அறிவித்தல்

தோற்றம்
03
06
1933



மறைவு
11
01
2024

**செல்லத்துரை மங்கயற்கரசி**

சிறுவிளானை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மங்கயற்கரசி கடந்த (11.01.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு செல்லாச்சி தம்தியரின் அன்பு மருமகளும், நாகம்மா, அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லமுத்து, வைரமுத்து, பொன்னையா, தங்கம்மா, ஐயாத்துரை, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், உருக்குமணி, புஸ்பராணி, உமாபதி, மனோறஞ்சினி, விஜயராணி, ஜெயராணி, காலஞ்சென்ற தவரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற முருகையா மற்றும் தர்மகுலசிங்கம், யோகேஸ்வரன், கணேஸ், கஜநாதன், கோணேஸ்வரன், மாலினி ஆகியோரின் அன்பு மாமியும், வினோதா, மயூரன், விஜிதா, காலஞ்சென்ற மயூரா மற்றும் தர்சினி, யாழினி, நந்தினி, அர்ச்சனா, பிரியங்கன், கஜந்தினி, கபிலன், கயூரன், கஜந்தன், கஜன், அனுஷா, திலக்சனா, தர்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அச்சுதன், அர்ச்சனா, ஜிந்துஷா, ஹேமபிநாத், கஸ்வினி, மிதின், லயனிகா, கஜீபன், சுஜீபன், ரஸ்மிதா, சயனா, வித்தியா, விசாஹா, சிவானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் கிராயிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கூட்டுறவாளர் வீதி,**
**அளவெட்டி கிழக்கு,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின்
# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 • 03 • 1944



உதிர்வு
05 • 01 • 2022

அமரர்
## கணபதிப்பிள்ளை செல்லத்துரை

(ஸ்தாபகர் சோதி ரெக்ஸ்ரைல்ஸ் - யாழ்ப்பாணம்,
விஸ்னு ஹாட்வெயர்- புன்னாலைக்கட்டுவன், ஆவரங்கால்)

திதி: திருதியை மார்கழி பூர்வபக்கம் (15.01.2024)

அன்பாலும் பண்பாலும் எங்களை அரவணைத்து
நல்வழிப்படுத்திய அன்புத் தந்தையே! ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவின் துயரம்
நினையாத நேரத்தில் மின்னல் போல எம்மை விட்டுப்
பிரிந்து சென்றாலும் தங்கள் வழிகாட்டல்களும்
அன்பான நினைவுகளும் எப்பொழுதும் எங்களுடன்
கூட இருக்கும் உருவமாய் இல்லாத போதிலும் உணர்வுகளாய்
எங்களுடனே என்றும் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர்
# இராசையா தெய்வேந்திரன்
## (உரிமையாளர், இந்திரன் ஜுவல்லர்ஸ்)



**தோற்றம்**
**02.09.1950**

**மறைவு**
**06.01.2022**

தவமிருந்து கிடைக்கவில்லை
இந்தப் பந்தம்
தவமிருந்து கிடைத்திருந்தால்
இந்த உறவு
இன்னும் நீடித்திருக்குமோ
என்னவோ....
ஆண்டுகள் இரண்டோடினாலும்
ஆறவில்லை "அப்பா"

**உங்கள் பிரிவுத்துயரில்**
## குடும்பத்தினர்

மீனாட்சி அம்மன் கோவில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கோழிப்பண்ணை ஒன்றை நடத்தும் ஆர்வம் உள்ளவர்களுக்கு மட்டும்.
எங்களுடன் இணைந்து 50 சதவிகித மூலதனத்துடன் அளவெட்டி பிரதேசத்தில் முதலீட்டில் ஈடுபடலாம். இடவசதி மற்றும் தேவையான மற்றைய உபகரண வசதிகள் எங்களிடம் ஏற்கனவே உள்ளது. அதனை இலாபமாக பகிர்ந்து கொள்ளலாம்.

**075 772 0604**
**075 525 6019**

(CR 41538) S-1

## 31ம் நாள் ஆத்மசாந்தி நிகழ்வும் நன்றி நவிலலும்

மண்மகிழ 08 • 04 • 1965



மனம் நெகிழ 15 • 12 • 2023

அமரர்
### மயில்வாகனம் மகாராசா (மது)

அன்னாரின் இத்துயரமான காலகட்டத்திலும். இறுதிக்கிரியைகளிலும் எமது ஆறாத துயரத்திலும் எமது துன்பத்தை தங்களின் துன்பமாக சுமந்து பல்வேறு வகைகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அத்தனை நல் உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொள்வதுடன் இன்று (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கந்தன் அருள்"
இருபாலை வீதி,
இருபாலை கோப்பாய்.

குடும்பத்தினர்
076 668 8244

(cs.27647) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 • 02 • 1955



மறைவு 25 • 01 • 2023

### அமரர் இராசதுரை நாகநாதன் (பண்டிதர்)

அப்பா இல்லாத வாழ்க்கையை
வாழ்ந்து பார்க்கும் போதுதான் தெரியும்
அப்பா என்பது வார்த்தை அல்ல
அது வாழ்க்கையின் பாடம் என்று...

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு,
கல்வியங்காடு.

நினைவுகளுடன் :
குடும்பத்தினர்

(cs 26403) (N.1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 07.06.1936



இறைவன் அடியில் 15.12.2023

### அமரர் யோகரட்ணம் சபாபதி

திதி: வளர்பிறை திருதியை

மனம் போல் வாழ்க்கை வாழ்ந்து
மனமுவந்து நான்காம் தலைமுறையும் கண்டு
மனதார பசித்தவர் புசிக்கத் தந்து மனமகிழ்ந்து
மாண்புறு மங்கையாய் வலம் வந்தீர்கள்

மண்ணில் வாழ்ந்த காலம் மட்டுமன்றி
விண்ணுலகமும் மகிழ்வாய் வாய்த்திட
அங்கு அமைதியாய் இளைப்பாற
என்றும் நம் பிள்ளையார் அருள்வதற்கு
என்றென்றும் நாம் பிரார்த்திக்கின்றோம்.

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.

இங்கனம்
குடும்பத்தினர்.

(CS 53520) S-1

## முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்

தோற்றம் 16 • 04 • 1941



மறைவு 27 • 12 • 2022

### அமரர் கதிரேசு சாம்பசிவம் (சோதிடர்)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்ட பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த எம்முயிர்
தெய்வமே!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

103, காரைநகர் வீதி,
வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 27653) S1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய...

இதற்காக எதிர்வரும் நாள்களில் பல கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. கலந்துரையாடல்களில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான கூட்டணி உருவாக்கப்பட உள்ளதாகவும் ஏப்ரல் மாதத்தில் இது தொடர்பிலான திட்டத்தை வெளியிட உள்ளதாகவும் தெரியவருகிறது.

வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள், மலையக அரசியல் கட்சிகள், பொதுஜன பெரமுனவின் சிலர் உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் ஆகியோரை இணைத்துக் கொண்டு இந்தக் கூட்டணியை அமைப்பதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டணி உருவானதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன். அதன் பின்னர் பிரதமர் பதவியைக் கூட்டணியின் பலமான தலைவர் ஒருவருக்கு வழங்குவது தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## டெங்குக்கு...

செய்யவேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது டெங்குத் தொற்று அபாய கட்டத்தில் காணப்படுகின்றது. டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றபோதும், டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இந்தநிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தால் அறிவுறுத்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலைகளைக் கொண்ட, நீர் தேங்கும் வகையில் கழிவுகளைக் கொண்டுள்ள குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்,வெற்றுக் காணிகளைப் பராமரிக்காத உரிமையாளர்கள் மற்றும் பொறுப்பானவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலைமைகளைக் கொண்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மீது எந்தவித சமரசமும் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், உரிய முறையில் கழிவுகளை அகற்றாத பிரதேசசபைகள், மாநகரசபைகள் என்பவற்றுக்குப் பொறுப்பான பிரதேசசபைச் செயலாளர், மாநகரசபை ஆணையாளர்களுக்கு எதிராகவும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும்அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ-ம-26)

## இஸ்ரேல்...

பிரிக்க சட்டத்தரணி, இஸ்ரேல் காஸாவில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஹமாஸ் மீதான தாக்குதல்கள் என்று கூறிக்கொண்டு பெண்கள், முதியவர்கள், பச்சிளம் குழந்தைகள் மீது அரக்கத்தனமான தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொள்கின்றது. போர் பாதுகாப்பு வலயங்களாக சில பகுதிகளை அறிவித்து விட்டு அதற்குள்ளும் இஸ்ரேலின் அக்கிரமத்தனமான தாக்குதல்கள் தொடர்கின்றன. இந்த உயரிய சபை பலஸ்தீனர்களின் துன்பியலைக் கருத்தில்கொண்டு இஸ்ரேலின் நடவடிக்கைகள் போர்க்குற்றங்கள் என்று அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதில் வழங்கிய இஸ்ரேலின் சட்டத்தரணி, இஸ்ரேல் எந்தவொரு போர்க்குற்றத்திலும் ஈடுபடவில்லை. ஹமாஸ் பயங்கரவாதிகளின் நிலைகளே இஸ்ரேலியப் படைகளால் தாக்கப்பட்டு வருகின்றன. இஸ்ரேல் மீதான பழிசுமத்தலுக்காக ஹமாஸ் அக்கிரமமான தாக்குதல்களை சொந்த மக்கள் மீது ஏவி வருகின்றது. கற்பழிப்பாளர்களும் வக்கிரமமும் கொண்ட ஹமாஸ் குழுவை தென்னாபிரிக்கா பாதுகாக்க முனைகின்றது என்று தெரிவித்தார்.

இந்த விவகாரம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டபோது, சர்வதேச நீதிமன்றத்துக்கு முன்னால் வெவ்வேறு பகுதிகளில் இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர். அவர்கள் தாம் சார்ந்த கருத்துகளை வெளிப்படுத்தி போராட்டத்திலும் ஈடுபட்டனர். (அ-ம)

## சுதந்திரதினத்தின்...

சகாக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் தனக்கு நெருக்கமான அரசியல் பிரமுகர்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தியுள்ளார் எனவும், இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட சந்திப்பொன்றையும் நடத்தவுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## 13 தமிழக...

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் இன்று யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-100)

## வெளிநாடு...

ணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இத்தாலிக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 23 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு வழங்கியிருந்தார். முறைப்பாட்டுக்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த முறைப்பாட்டுகளுக்கு அமையவே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை, அல்வாயைச் சேர்ந்த 41 வயதான மேற்படி சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில், நெல்லியடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் யாழ்ப்பாணத்தின் பல இடங்களைச் சேர்ந்த சுமார் 10க்கும் மேற்பட்டவர்ளை ஏமாற்றி சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## யாழ். வருகிறது...

சர்வதேசநாணயநிதியத்தின்பிரதிநிதிகள் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. அந்தக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுமுன்தினம் சந்திப்பில் ஈடுபட்டது. அடுத்தகட்ட கடன் பெறுகைகள் தொடர்பில் தற்போது முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே இலங்கைக்கான பயணத்தின் ஒரு பகுதியாக நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு இன்று பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடமாகாணத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலரையும் இந்தக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (அ-ம-26)

## விசேட...

பகுதிகளில் நேற்று கள ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டனர். கொழும்பிலிருந்து வந்துள்ள மருத்துவர்களும் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் டெங்கு தீவிரமாகப் பரவி வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலேயே டெங்குப் பரவல் அதிதீவிரமாக உள்ள நிலையில், டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தேர்ச்சிபெற்ற குழுவினர் யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் நேற்றுப் பரவலாக கள ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டனர்.

**ஆளுநரும் ஆராய்வு**

டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவினருக்கு மேலதிகமாக, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸும் டெங்கு தொடர்பான கள ஆய்வுப் பணிகளில் நேரடியாக ஈடுபட்டார். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் டெங்குத் தொற்று இலகுவாகப் பரவக்கூடிய ஏதுநிலையில் இருக்கும் பகுதிகள் அவதானிக்கப்பட்டு விரைவில் டெங்கைக் கட்டுப்படுத்தக்கூடிய திட்டங்களாக சில உத்தரவுகளை அவர் பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் வெள்ளம் வழிந்தோட முடியாத வகையிலும், பராமரிப்புக்குக் கடினமான வகையிலும் அமைக்கப்பட்டுள்ள கால்வாய்களில் இலகுவான பராமரிப்பை மேற்கொள்ளும் படியான மறுகட்டுமானம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (அ-ம-26)

## உழவியந்திரம்...

குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகத்தில் பணிபுரியும் அன்ரன் பிலிப்பின்தாஸ் (வயது-31) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மருதங்கேணியில் வெற்றிலைக்கேணி நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவர், எதிரே வந்த இராணுவ உழவியந்திரத்துடன் நேருக்குநேர்மோதிவிபத்துக்குள்ளானார்.

விபத்தையடுத்து அன்ரன் பிலிப்பின்தாஸ் பயணித்த மோட்டார்சைக்கிள் இரண்டாக உடைந்ததுடன், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-100)

## தேசிய பொங்கல்விழா...

பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் தேசிய பொங்கல் விழாவில் பங்கேற்கவுள்ளனர். (அ-ம-44)

**வேலையாள் தேவை**

யாழ் பிறவுண் றோட் சந்தியில் அமைந்துள்ள கபே (Cafe) ஒன்றிற்கு பகுதி/ முழு நேர வேலையாட்கள் தேவை.

வயதெல்லை 20-30

தொடர்பு: **076 000 5783**

# காணி போலி வெளிப்படுத்தல் உறுதி மோசடி

இல.741, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை தேவராஜா ஆகிய எனக்கு டச்சு வீதி, கல்வியங்காட்டில் உள்ள நிலப்பரப்பு 113 ஆதனமானது பரம்பரை வழி வந்த உரித்தும் ஆட்சியுமாகும். இதில் என்னால் விற்பனை செய்யப்பட்ட பகுதிகள் போக நிலப்பரப்பு 19 குளி 10 இனை எனது மகளிற்கு அற்றோனி தத்துவம் மூலம் நன்கொடை வழங்கியிருந்தேன்.

நான் இவ் ஆதனத்தை தங்கு தடையற்ற ஆட்சியிலும் கட்டுப்பாட்டிலும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வைத்துள்ளேன். எனது மகளது பெயரிலேயே கோப்பாய் பிரதேசசபையில் சோலைவரி பதிவுகள் காணப்படுகின்றன.

குறித்த ஆதனத்திற்கு அருகில் குடியிருக்கும் சில நபர்கள் மோசடியான முறையில் வெளிப்படுத்தல் உறுதிகளை நிறைவேற்றி கபடமான முறையில் அபகரிக்க முயற்சி எடுத்து வருகின்றார்கள். குறித்த வெளிப்படுத்தல் உறுதிகளில் கிராமசேவையாளர் பிரிவு கிராம சேவையாளர் பிரிவு J/260 என மோசடியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் டச்சு வீதி, கல்வியங்காட்டில் உள்ள எனது ஆதனத்தினுடைய கிராம சேவையாளர் பிரிவு J/259 என்பதாகும். குறித்த நபர்கள் யாழ்ப்பாண நீதிமன்றில் PC/02/2023 எனும் வழக்கு தாக்கல் செய்து போது குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு எனது ஆட்சியும் உரித்தும் நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொய்யான விபரங்களை குறிப்பிட்டு செய்யப்படும் விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என பொதுமக்களினை கேட்டுக் கொள்கின்றேன். இவர்களுக்கு எதிராக 50 மில்லியன் நட்டஈடு கோரி என்னால் வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டத்திருவிழாவுக்கு தயாராகிறது வல்வை



யாழ்ப்பாணம் வல்வை விக்கினேஸ்வரா சனசமூக சேவா நிலையம், வல்வெட்டித்துறை மாவடி உதயசூரியன் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறையில் மாபெரும் வினோத விசித்திர பட்டத் திருவிழா போட்டி தைத்திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி வல்வெட்டித்துறை கடற்கரையில் இடம் பெறவுள்ளது.

அதனையொட்டி பல்வேறு வகையான பட்டங்களின் விற்பனை அங்கு சூடுபிடித்துள்ளதுடன் 2அடி முதல் 7அடி முதல் வரை பட்டங்களும் இதற்காக தயாராகி வருகின்றன. மேலும் பட்டங்களைப் பறக்கவிட்டு ஒத்திகை பார்க்கும் நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படு கின்றன.

(ச-27)

## தேவை

சாவகச்சேரி நகரில்
கடை வாடகைக்கு
தேவை.
தொடர்புகளுக்கு: 075 989 8136

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL Literature 2024 & 25, AL
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.
K.Ganesh B.A 077 766 8725

## சிங்களப் பாடநெறி வகுப்புக்கள்

* Grade 6-11 (School Text Book)
* Spoken Sinhala (3Months)
* O/L Sinhala Exam (Past Paper Classes & Special Coaching Classes)

077 615 4450 நல்லூர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 077 4919

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**சமையலாளர்**-யாழ்ப்பாணத்து பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். (சம்பளம் 75000 தொடக்கம் 100000 வரை)
**சமையல் உதவியாளர்** -(முன் அனுபவம் தேவை)
**துப்புரவுப் பணியாளர்**

077 251 4981, 077 872 9806
195, கோயில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.

## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர்
(CONSULTANT SURGICAL ONCOLOGIST)

**Dr.G.Sritharan**

திங்கள், புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் 5.00 PM
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 2.00 PM

புற்றுநோய் அறுவை சிகிச்சை சேவை

முதல் 25 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக வழங்கப்படும்

புற்றுநோய் பரிசோதனை

* மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் மார்பு மீள்உருவாக்க சிகிச்சைகள்
* வாய் புற்றுநோய் பரிசோதனை
* குடல் புற்றுநோய் பரிசோதனை
* உணவுக்குழாய் மற்றும் வயிற்றுப் புற்றுநோய் பரிசோதனை
* கழுத்து புற்றுநோய் (தைரொயிட்) பரிசோதனை
* அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கான வேறு குறிப்பிட்ட பரிசோதனைகள்

முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212256990

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 02 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**


- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- பார்வையிடும்நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389,077 986 5457

உங்கள் இல்லங்களிலும் உங்கள் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கட்டும்

RE/MAX

# இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



யாழ் மண்ணில் வீடு மற்றும் காணி வாங்குவதற்கு விற்பதற்கு அல்லது வாடகைக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்

## BUY - SELL - RENT

**RE/MAX ELITE CHUNNAKAM**

No.115, KKS Road, Chunnakam (People's Leasing Building, 1st floor)

www.remaxelite.lk Info@remaxelite.lk 0777 441 113 | 021 224 2855



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது
கொடும் அரக்கர்களின் அம்பு பட்டு துடிதுடித்தது
இமய நாடு உந்தனுக்கு குழி பறித்தது
உன்னை இழந்ததினால் எங்கள் நெஞ்சு
பதைபதைக்குது

- புதுவை இரத்தினதுரை

Registered as a Newspaper

சஞ்சீவி

பக்கங்கள்: 08

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : ... ர்கழி 29 ... ற்றுக்கிழமை ... 183




# வடக்கில் படங்காட்டிய ஜனாதிபதி கிழக்கில் படங்காட்டிய ஆளுநர்

○ நிலாந்தன்

புதிய ஆண்டு பிறந்த கையோடு ஜனாதிபதி வடக்குக்கு வருகை தந்த அதே காலப்பகுதியில், அவருடைய ஆளுநர் கிழக்கில் மிகப்பெரிய பண்பாட்டு விழா ஒன்றை அரங்கேற்றியிருக்கிறார்.

வடக்கில் ஜனாதிபதி பல்வேறு தரப்புகளையும் சந்தித்தார். தொழில் முனைவோர், பல்கலைக்கழகப்பிரமுகர்கள், குடிமக்கள் சமூகம் என்று சொல்லப்பட்டவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இசைத்துறையில் விளையாட்டுத் துறையில் பளு தூக்கும் போட்டியில் சாதனை புரிந்தவர்கள், வடக்கில் கல்விப் பெறுபேறுகளில் சாதனை புரிந்தவர்கள், அரச உயர் அதிகாரிகள், தனது கட்சிப்பிரதிநிதிகள் என்றவாறாகப்பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்திருக்கிறார். அவர் யாரைச் சந்திக்கவேண்டும், சந்திக்கக்கூடாது என்பதனை அவருக்கு இணக்கமான வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

குறிப்பாக தனியார் விடுதியொன்றில் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியிலும் உரையாற்றும் பொழுது, அவர் பேசியவற்றின் சாராம்சம் என்னவென்றால், 'மாகாணசபைகளுக்குப் போதிய அதிகாரங்கள் உண்டு; மேல் மாகாணத்தில் கட்டியெழுப்பப்பட்டு இருப்பதுபோல பிராந்திய பொருளாதாரங்களைக் கட்டி எழுப்புங்கள்;மாகாணசபைகளின் நிதி அதிகாரம் அதற்குப் போதுமானது; முதலீட்டுக்கு எனது கையைப் பார்த்துக் கொண்டிராதீர்கள்; புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி உதவிகளையும் துறை சார்ந்த உதவிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்; அதற்கு நாம் ஒத்துழைப்போம்...' என்பதுதான். அதிலும் குறிப்பாக அவர் பொருளாதார வளர்ச்சிக்கு உதாரணங்களாக ஜப்பான், கொரியா, பிரித்தானியா போன்ற ஒற்றையாட்சி நாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். அங்கே கூட்டாட்சி இல்லை, ஆனாலும் அந்நாடுகள் பொருளாதார ரீதியாகச் செழிப்பாகக் காணப்படுகின்றன என்ற பொருள்பட ரணில் பேசியிருக்கிறார்.

மாகாணசபைகள் இயங்காத ஒரு பின்னணியில், இப்போதைக்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் நோக்கம் இல்லாத ஒரு ஜனாதிபதி, 'மாகாண சபைகளுக்கு உள்ள நிதி அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள்' என்று கூறுகிறார். விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் வடமாகாணசபையானது முதலமைச்சர் நிதியம் ஒன்றை உருவாக்க முயற்சித்தது. ஏற்கனவே அதையொத்த நிதியம் மேல் மாகாணத்தில் உண்டு. ஆனால் மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆனால் ஜனாதிபதி கூறுகிறார், '13 ஆவது திருத்தத்துக்குள் எல்லா அதிகாரங்களும் உண்டு' என்று.

அப்படியென்றால் அவர் 2015 இலிருந்து பிரதமராக இருந்த காலகட்டத்தில் கூட்டமைப்போடு சேர்ந்து உருவாக்க முயற்சித்த "ஏக்கிய ராஜ்ய" என்ற தீர்வு முயற்சிக்குப் பொருள் என்ன? மாகாணசபைக்குள்ள அதிகாரங்கள் போதும் என்றால் எதற்காக அப்படி ஒரு ஏக்கிய ராஜ்ஜிய என்ற புதிய ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்கவேண்டும்? இது பற்றி யாராவது அவர்களிடம் கேள்வி கேட்டார்களோ தெரியவில்லை. ஆனால் வழமையாக இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கும் வடக்கு இந்த முறை அது போன்ற கேள்விகளைக் கேட்கவில்லை என்று அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்குச் சொன்னதாக ஒரு தகவல்.

இவ்வாறு ஜனாதிபதி வடக்கில், படம் காட்டி, படம் எடுத்து, றியோ கிறீம் ஹவுசில் ஐஸ் கிறீமும் அருந்தி, பதின்மூன்றுக்குள் எல்லாம் உண்டு என்று கூறிய அதே காலப்பகுதியில், கிழக்கில் அவருடைய ஆளுநர் பெருமெடுப்பில் ஒரு பண்பாட்டுப் பெருவிழாவை ஒழுங்குபடுத்தியிருந்தார். கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு முன் நோர்வேயின் அனுசரணையோடு பேச்சுகள் நடந்த காலகட்டத்தில், திருகோணமலையில் நடந்த "மானுடத்தின் ஒன்று கூடலுக்குப்" பின் அங்கே நடந்த மிகப்பெரிய அளவிலான ஒன்றுகூடல் அது வென்று கூறலாம். அதை ஒரு 'மெகா' நிகழ்வாக ஆளுநர் திட்டமிட்டு நடத்தியிருக்கிறார். அதற்கு இந்தியாவின் உதவிகளையும் பெற்றிருக்கிறார். அதன்மூலம் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ரீதியிலான பிணைப்புகளைப் பலப்படுத்தும் முயற்சிகளை வடக்கிலிருந்து கிழக்குக்கும் விஸ்தரிக்கும் ஒரு எத்தனம் அது. அப்படி ஒரு பண்பாட்டு விழாவுக்கு இந்தியா பக்கத்துணையாக இருக்கிறது என்பது சிங்களக் கடும்போக்குவாதிகளை கோபப்படுத்துமா? அல்லது பயப்படுத்துமா? என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

குறிப்பாக ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல் நிகழ்ச்சிக்கு பயிற்சியாளர்கள் முதற்கொண்டு, சிறப்பு விருந்தினர்கள், அறிவிப்பாளர்கள் வரை தமிழகத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கிறார்கள்.



பொங்கல் பெருவிழாவில் ஆயிரக்கணக்கானவர்களை அந்த மைதானத்தில் திரட்டி, நூற்றுக்கணக்கில் பெண்களை ஆட வைத்து, தமிழ் மக்கள் மத்தியில் ஓர் எழுச்சியை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். அந்நிகழ்வில் உரையாற்றிய சாணக்கியன் தமிழர்களின் தலைநகர் என்று அழைக்கப்படும் திருகோணமலை என்று உச்சரிக்கிறார்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் அதிகம் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு தமிழ் மாவட்டம் திருகோணமலை ஆகும். இப்பொழுதும் அங்கே குன்றுகளாகக் காணப்படும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், தியாகி திலீபனின் ஒளிப்படத்தை, வாகன ஊர்தியில் எடுத்துச் சென்றபோது தாக்கப்படும் அளவுக்கு அங்கு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமை உண்டு. அப்படிப்பட்ட ஒரு மாவட்டத்தில் பெருமெடுப்பில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு விழாவை ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒழுங்கமைத்திருக்கிறார். அவர் ஓர் அரச ஊழியர். ஜனாதிபதியின் பிரதிநிதி. ஆனால் நிகழ்வில் அவருக்குத் தரப்பட்ட முக்கியத்துவம்; அவரை அங்கு கூடியிருந்தவர்கள் வரவேற்ற விதம்; என்பவற்றைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது அவருக்கு அங்கே ஒரு கதாநாயக அந்தஸ்து வழங்கப்பட்டது. அவர் பேசுவதற்காக மேடையை நோக்கி வந்த பொழுது "அலப்பறை கிளப்புறோம்" என்ற ரஜினி படப்பாடல் ஒலிக்க விடப்பட்டது. அவர் ஒரு கதாநாயகனைப் போல மேடையை நோக்கி வந்தார். வரும் வழியில் நடனம் ஆடிய பெண்கள் அவரை நிறுத்தி கைகுலுக்கி செல்ஃபி எடுத்துக் கொண்டார்கள். அதாவது ஒரு நிர்வாக அதிகாரி கதாநாயகனாக கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் அந்தப் பண்பாட்டு விழா நடந்து கொண்டிருந்த அதே மாகாணத்தில், மட்டக்களப்பில், மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் 125ஆவது நாளைக் கடந்து விட்டது. அது மட்டுமல்ல, கிழக்கில் அண்மையில் பெய்த கடும் மழையால், பல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நிவாரணங்களை வழங்கி வருகின்றது. அந்த ஒளிப்படங்கள் முகநூலில் பகிரப்படுகின்றன. ஒரு பகுதி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மாகாணத்தில், இது போன்ற மெகா பண்பாட்டு நிகழ்வுகள் அவசியமா என்ற கேள்விகள் உண்டு.

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.நிக்ஸன்

# சர்வதேச நீதிமன்ற விவகாரம் நுட்பமாகக் கையாளும் இலங்கை

காஸாவில் நடப்பது இனஅழிப்பு என்று தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கண்டித்திருக்கின்றன. ஆனாலும் அமெரிக்காவை விடவும் ஐரோப்பிய நாடுகள் காஸாவில் நடக்கும் மனிதப்படு கொலைகளைக் கண்டிப்பதுடன் இஸ்ரேல் அரசு மீதும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.











காஸாவில் தொடரும் உயிரிழப்புகள் ஏற்க முடியாதவை என நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் இந்தியா அறிவித்துள்ளது. பலஸ்தீன காஸாப் பகுதியில் நிலவும் சூழல் குறித்து இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டை தெரிவித்து உரையாற்றும்போதே இந்தியாவின் ஐ.நா.வுக்கான நிரந்தரப் பிரதிநிதி ருசிரா கம்போஜ் மேற்சொன்ன விடயத்தைக் கூறியிருந்தார். ஆனாலும் இஸ்ரேல் அரசுடன் இந்திய மத்திய அரசு கொள்கையளவில் கைகோர்த்திருக்கிறது. தென்னாபிரிக்க அரசு இன அழிப்பு என்று வழக்குத் தாக்கல் செய்திருப்பதை இந்திய மத்திய அரசு இதுவரையும் பகிரங்கமாக வரவேற்கவில்லை. மதில்போல் பூனை போன்று உள்ளது.

ஆகவே அமெரிக்க - இந்திய அரசுகள் இஸ்ரேலுடன் நிற்பதை அறிந்தே தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கை தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் தமிழ்க் கட்சிகளும் பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை என்பது தெரிகிறது. தமிழ்ச் சிவில் சமூக அமைப்புகளும் பாராட்டவில்லை.

இஸ்ரேலுடன் இணைந்து ஹமாஸ் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதில் அமெரிக்க இந்திய அரசுகள் ஓரணியில் நிற்கின்றன. தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் வல்லரசுகளிடையே எழுந்துள்ள அரசியல் போட்டியில் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோச முற்றுமுழுதாக மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பாளனாக மாறியிருக்கிறார்.

அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளின் எதிரொலியாக தென்னாபிரிக்கா, சர்வதேச நீதிமன்றத்தில் பலஸ்தீன மக்கள் சார்பில் காஸாவில் நடப்பது இனவழிப்பு என்று பகிரங்கப்படுத்தி வழக்கும் தாக்கல் செய்திருந்தாலும் அதனைப் பலஸ்தீன புலம்பெயர் அமைப்புகள் நன்கு பயன்படுத்தியிருக்கின்றன.

சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்த முதல் நாள் விசாரணையில் தனது தரப்பு வாதங்களைத் தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளது. காஸாவில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தென்னாபிரிக்கா வலியுறுத்தியுள்ளது. அமெரிக்க மாநில அரசுகளின் உறுப்பினர்கள் இருநூறு பேர் காஸாவில் போர்நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சென்ற ஒக்ரோபர் ஏழாம் திகதி , போர் ஆரம்பிக்கப்பட்ட நான்கு மாதங்களுக்கும் குறைவான நிலையில் காஸாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்தையும் கடந்துள்ளதாகவும் இதனால் போரை நிறுத்துமாறும் அமெரிக்க உள்ளூர் பொது அமைப்புகளும் ஜோ பைடனுக்கு கடிதம் எழுதியிருக்கின்றன.

சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்க 700 இஸ்ரேல் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்களே செய்தி வெளியிட்டிருக்கின்றன. இஸ்ரேலிய மக்களின் எழுபத்து ஐந்து சதவீதமான மக்கள் காஸாவில் போர் நடப்பதை விரும்புகின்றனர் என்றும், இந்த நிலையில் 700 பொதுமக்கள் பலஸ்தீன மக்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலிய ஊடகங்கள் கூறுகின்றன. இனவழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் கணிசமான அளவு இஸ்ரேலிய மக்களுக்கு அச்சம் ஏற்பட்டு விட்டதாக அரபு ஊடகமான நியூஅரப் (newarab) என்ற ஆங்கிலச் செய்தி இணையத்தளம் கூறுகின்றது.

மியான்மரில் ரோஹிங்கிய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இன அழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழக்கு விசாரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கி வரும் பிரித்தானியா, காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக அமைதியாக இருக்கின்றது. சட்ட ஆதாரங்களைத் தேடவேண்டும் என்று மாத்திரம் பிரித்தானியா கூறியிருக்கிறது.

ஆகவே ரஷ்ய - உக்ரைன் போர்ச்சூழலால் குழம்பியிருந்த உலக அரசியல் ஒழுங்கு தற்போது இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து மேலும் குழப்பமடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அதுவும் தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்த பின்னர் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிடையேயான உலக அரசியல் அணுகுமுறையில் முன்னுக்குப் பின் முரணான வாதங்கள் எழுந்துள்ளன.

இந்த அரசியல் சூழ்நிலையை இலங்கை நன்கு பயன்படுத்துகிறது . குறிப்பாக முள்ளிவாய்க்கால் போரில் சுமார் நாற்பதாயிரம் மக்கள் கொல்லப்பட்டும் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் காணாமல் போயிருப்பதாகவும் 2010 இல் வெளியான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனாலும் இனவழிப்பு என்று எந்த ஒரு நாடும் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை மீது வழக்குத் தாக்கல் செய்ய முன்வரவில்லை. இதற்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச இந்தியாவைக் கையாண்ட அணுகுமுறையே காரணம் என்பது வெளிப்படை.

நான்கு மாதங்களில் 23 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்ட பின்னர் காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்ததை உணர்ந்தும் அச்சமடைந்த நிலையிலும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தை நுட்பமாகக் கையாள ஆரம்பித்திருக்கிறார்.

தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை மத்திய கிழக்கு நாடுகள் வரவேற்றுள்ளன. இந்தப் பின்னணியில் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடன் ரணில் விக்கிரமசிங்க சென்ற புதன்கிழமை பேச்சு நடத்தியிருக்கிறார். தூதுவர்களுடன் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் ஊடகங்களில் வெளிவரவில்லை.

ஆனால் மத்திய கிழக்குப் பிராந்தியம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பாக ரணில் தூதுவர்களிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேவேளை, கொழும்பில் உள்ள மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அல்லாத நாடுகளின் ஏனைய தூதுவர்களையும் ரணில் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

ஏனெனில் குழம்பியுள்ள உலக அரசியல் ஒழுங்குச் சூழலில் எந்த ஒரு சிறிய நாட்டின் ஒத்துழைப்பும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்குத் தேவைப்படுகின்றது. அதேபோன்று புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஏதேனும் சிறிய நாடுகளைப் பயன்படுத்தக் கூடும் என்ற அச்ச நிலை இலங்கைக்குத் தற்போது உருவாகியுள்ளது. குறிப்பாக கனடா, இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இனவழிப்பு என்று கூறி வருகின்றது. அதுவும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக கனடா புலம்பெயர் தமிழர்களின் வாக்குகளை மையமாகக் கொண்டு பேசி வருகின்றன.

சில சமயங்களில் கனடாவின் வெளியுறவுக் கொள்கையில் தமிழ் இனவழிப்பு என்பது இணைக்கப்பட்டால், அதனை மையமாகக் கொண்டு வேறு சில சிறிய நாடுகளைப் புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்துவார்கள் என்று கருதியே அதனைத் தடுக்கும் முன்னேற்பாடுகளில் இலங்கையின் வெளியுலக இராஜதந்திர சேவை அதிகளவு கவனம் செலுத்துகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளைச் சந்தித்து பலஸ்தீன மக்களுக்கு இலங்கை முழு ஆதரவு என்று ரணில் உறுதியளித்திருந்தாலும், அமெரிக்க - இந்திய அரசுகளைப் பகைத்துக்கொள்ளாத முறையில் இஸ்ரேல் அரசுடன் இலங்கை முழு அளவில் மறைமுகமாகக் கைகோர்த்திருக்கிறது என்பதுதான் உண்மை.

இலங்கையைப் பொறுத்தவரை தற்போதைக்குச் சீனாவை ஓரளவுக்குத் தூரத் தள்ளிவைப்பது போன்றதொரு தோற்றத்தைக் காண்பித்தாலும், சீனாவுக்குத் தாக்கம் எழாத முறையில் அமெரிக்க - இந்திய அரசுகளை இலங்கை அரவணைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கான காரண - காரியம் என்பது குழம்பியுள்ள உலக அரசியல் ஒழுங்கு நிலைமைக்குள் கனடா ஊடாக வேறு சிறிய நாடுகளை புலம்பெயர் தமிழர்கள் நாடிவிடக் கூடும் என்ற அச்சமே.

இலங்கையும் முற்று முழுதாகச் சீனாவின் பக்கம் செல்வதைத் தடுக்கும் நோக்கிலேயே ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்பதைக் கனடாவின் பிரதான அரசியல் கட்சிகள் மூலமாக அமெரிக்கா சொல்ல வைக்கிறது என்ற அவதானிப்புகளும் இல்லாமில்லை.

அதேநேரம் காம்பியா என்ற ஆபிரிக்காவின் சிறிய நாடு ஒன்றுதான் ரோஹிங்ய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இனஅழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது. இதனை பிரித்தானியா முழுமையாக ஆதரித்து வருகின்றது.

ஆகவே இவ்வாறான ஒரு பின்னணி புலம்பெயர் அமைப்புகளுக்கு வந்துவிடும் என்ற அச்சம் மற்றும் எதிர்வுகூறல் இலங்கைக்கு உண்டு. இதற்கு ஏற்ப பல அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் இலங்கைத் தீவுக்குள்ளும் வெளியுலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டு அரங்கேறி வருகின்றன. ஆனால் தமிழ்த்தரப்பில் இந்த உத்திகள் எதுவுமே இல்லை. தமிழரசுக் கட்சியின் தலைவர் போட்டி, ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவது மற்றும் போலித் துவாரகா பற்றிய ஆய்வுகளையே தமிழ்த்தரப்பு செய்துகொண்டிருக்கிறது. பல தமிழ் ஊடகங்களும் இதற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

குறைந்தபட்சம் தென்னாபிரிக்க அரசைப் பாராட்டி ஜனாதிபதி சிறில் ரமபோசாவுக்குத் தமிழ்த்தேசியக் கட்சிகள் கடிதம் எழுதியிருக்கலாம். இன அழிப்பு என்று கூறிவரும் கனடாவின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளான கென்சர்வேட்டிவ், லிபரல் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்குக் கடிதத்தின் மூலம் பாராட்டியிருக்கலாம். ஆகவே அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகவும் இந்தியாவின் வஞ்சக அரசியல் செயற்பாட்டுக்குள்ளும் தமிழ்த் தேசியக் கட்சிகள் முடங்கியுள்ளன என்பதையே இது பகிரங்கப்படுத்துகின்றது.

2006 இல் விடுதலைப் புலிகளைத் தடை செய்த கென்சர்வேட்டிவ் கட்சி ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்புத்தான் என்று கூறுவதுடன், பதவிக்கு வந்தால் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆகவே பலஸ்தீன மக்களை ஆதரிப்பதாகக் காண்பித்துக் கொண்டு இஸ்ரேல் அரசின் பக்கம் இலங்கை நிற்பது போன்று அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு இரட்டை வேடம்போடுகின்றது. ஆனால் அரசற்ற சமூகமாகக் கடந்த எண்பது வருடங்கள் அரசியல் போராட்டம் நடத்தி வரும் ஈழத்தமிழ்த் தரப்பு, 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஏன் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு மாத்திரம் விசுவாசமாக இருக்கின்றன?

2014 வரையும் தென்னாபிரிக்க அரசு ஈழத்தமிழர் பக்கம் நின்றது. ஆனால் அதனைத் தமிழர் தரப்பு உரிய முறையில் கையாளவில்லை. பிரதி ஜனாதிபதியாக இருந்த சிறில் ரமபோச 2020 இல் தென்னாபிரிக்க ஜனாதிபதியாக வரக்கூடும் என்று கணித்து அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச சிறிரமபோசவை இலங்கைக்குப் பல தடவைகள் அழைத்துப் பேசியிருக்கிறார். ஈழத்தமிழர் பிரச்சினை 2009 இல் முடிவடைந்து விட்டது என்றும் இலங்கையில் இன நல்லிணக்கமே அவசியம் என்றும் போதித்திருந்தார். இன்று இமாலயப் பிரகடனத்துக்கு தென்னாபிரிக்கா முழு ஆதரவு வழங்குவதுடன் ஈழத் தமிழர்கள் இலங்கையர்களாக வாழமுடியும் என்றும் கூற ஆரம்பித்துள்ளது. ஆகவே உலக அரசியல் விவகாரங்களை அறிந்து நுட்பமாகக் கையாள்வதற்குரிய புதிய இளம் தலைமை ஒன்று ஆங்கில அறிவுடன் உருவாகவேண்டும்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் வல்லரசாகத் தன்னைக் காணிப்பிக்க முற்படும் இந்தியா, சர்வதேச விவகாரங்களில் இரட்டை வெளியுறவுக் கொள்கைகளோடு எவ்வாறு பயணிக்கிறது என்பதற்கும், சிறிய நாடான இலங்கை ஈழத்தமிழர் விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாக நீக்கம் செய்ய, மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் இந்தியாவையும் அதேநேரம் பொருளாதார உதவிகளைப் பெற சீனாவையும் எவ்வாறு நுட்பமாகக் கையாள்கின்றது என்பதற்கும் கண்முன்னே பல உதாரணங்கள், படிப்பினைகள் உண்டு. சர்வதேச நீதி என்பது உலக நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களில் தங்கியுள்ளது. ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்றுக்கொள்ளும் பிரித்தானியா, காஸாவில் நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்கத் தயங்கும் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு சர்வதேச அரசியலை இலங்கை நன்கு கையாளுகின்றது - காய் நகர்த்துகின்றது. ஆனால் தமிழ்த்தரப்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் சோ.பத்மநாதன்

# சார்க் இலக்கியவிழா: ஒரு அனுபவப்பகிர்வு



கவியரங்கத்தில் சோ.ப


கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் விருது பெறுகிறார்.


காஞ்சனா பிரியகாந்தாவின் உரை. தலைமை : சோ.ப



கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நான் சார்க் இலக்கிய விழாவில் ஆண்டு தோறும் கலந்து வந்துள்ளேன். சிங்கள எழுத்தாளர் தயா திஸநாயக்க எனக்கு முன்பே இந்த இலக்கிய விழாவில் கலந்திருக்கிறார். தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ள வேண்டுமென விரும்பிய அவர், மேமன் கவியை உசாவ அவர் என்னையும் கந்தையா ஸ்ரீகணேசன் பெயரைப் பரிந்துரை செய்திருக்கிறார் எனப் பின்னர் தெரிய வந்தது. கமலா விஜயரத்ந, பிரநீத் அபயசுந்தர முதலியோர் முன்பே அறிமுகமானவர்கள்.

இம்முறை பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சமந்த இலங்கக்கோன், எழுத்தாளரும் வெளியீட்டாளருமாகிய காஞ்சனா ப்ரியகாந்த, பௌத்த மற்றும் பாளிப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நிபுனிகா,திலானி, மடுகொடகே, நிரோஷா சல்வத்துற ஆகியோருடன் ஸ்ரீகணேசனும் நானும் (சோ.ப) இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தினோம். வங்கதேசம், இந்தியா, நேபாளம், ஸ்ரீலங்கா, பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 133 எழுத்தாளர்கள் தில்லியில் நடந்த 64ஆவது FOSWAL நாலு நாள் இலக்கிய விழாவில் கலந்து கொண்டனர்.

SAARC அமைப்பைப் பற்றி இங்கு சிறிது கூறவேண்டும் 1986இல் எட்டு தென்னாசிய நாடுகள் இணைந்து இவ்வமைப்பை உருவாக்கின. அரசியல், பொருளாதார, சமூக பிராந்திய ஒத்துழைப்புகளை இவ்வமைப்பு, கலாசார ஒத்துழைப்பை தன் சாசனத்தில் உள்வாங்கவில்லை. பத்மஸ்ரீ அஜீத் கௌரின் சலியாத முயற்சியால் 2002 இல் காத்மண்டுவில் கூடிய SAARC இன் 13 ஆவது உச்சிமாநாட்டில் கலாசாரத் தொடர்பை உள்வாங்கும் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தென்னாசியாஎன்றஅடையாளம்ஏன்முன்மொழியப்பட்டது? இந்தப் பிராந்தியம் தான் கிழக்குக்கும் மேற்குக்கும், மரபுக்கும் நவீனத்துவத்துக்கும், கொலனித்துவத்துக்கும் விடுதலைக்கும் இடையிலான முரண்பாட்டுக்கு சமர்க்களமாக இருந்தது. இம்மக்களுடைய வலிகளுக்கும் ஏக்கங்களுக்கும் இந்நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இலக்கிய வடிவம் தந்தனர்.

சார்க் எழுத்தாளர்கள் இனவாதத்துக்கோ மத அடிப்படைவாதத்துக்கோ ஆட்பட மறுத்தனர். ஆனால் அவர்கள் மதத்துக்கும் ஆன்மீகத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். சூஃபிகளும் சித்தர்களும் வெகுஜனத்தோடு தொடர்பாட கவிதையை ஒரு சாதனமாக இனங்கண்டனர். சரர்க் எழுத்தாளர்களின் அமைப்பு ஆண்டு தோறும் எழுத்தாளர்களைக் கூட்டி இலக்கியம் சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகள், கவிதை அளிக்கைகள், கருத்தாடல்களை நடத்தி வருகிறது பெரும்பாலும் புதுதில்லியில் மாநாடுகள் நடத்தப்பட்டாலும், ஆக்ரா, ஜெய்ப்பூர் முதலிய நகரங்களிலும் மாநாடுகள் நடந்தேறின.

யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸில் கட்டுநாயக்கா அங்கிருந்து சென்னை, சென்னை - தில்லி, அப்பால் ஒன்றரை மணிநேரம் ஓட்டோவில் என நீண்ட பயணம். மொத்தம் 24 மணித்தியாலம் எடுத்தது. நொய்டா விருந்தினர் விடுதியில் தங்கும் ஏற்பாடு. டிசெம்பர் 3 தொடக்கம் 6 வரை நாலு நாள் விழா புதுதில்லியின் கவின்கலைகள் மற்றும் இலக்கிய அக்காதெமியில். பேராளர்கள் பதிவு மற்றும் தலைவர் பத்மஸ்ரீ அஜீத் கௌரின் வரவேற்புரையைத் தொடர்ந்து, முனைவர் மாதவ் கௌசிக்கின் பக்தி பற்றிய உரையும், பேராசிரியர்ச K.T.S.றாஓவின் பௌத்தம் பற்றிய உரையும், ஷயின் மாயாராமின் சூஃபி பற்றிய உரையும் இடம்பெற்றன.

பூர்வாங்க அமர்வைத் தொடர்ந்து முன்னாள் ஆளுநர் N.N.வோறா தலைமையில் "நடந்து கொண்டிருக்கும் இரு அர்த்தமற்ற போர்கள்" என்ற கருப்பொருளில் பேராசிரியர் அபி சுபேதி (நேபாளம்), M.L.லஹோற்றி, H.S. ஃபூல்கா (இந்தியா) உரையாற்றினர்.

நண்பகல் எழுத்தாளர் கௌரவிப்பும் நூல்கள் வெளியீடும் இடம்பெற்றன. வங்கதேசம், பூட்டான், நேபாளம், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து எழுத்தாளர்கள் இவ்வாண்டு கௌரவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களுள் ஒருவர்.

கடந்த ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட நூல்கள் அடுத்து வெளியிடப்பட்டன. என் Down Memory Lane என்ற கவிதைத் தொகுதியும் ஸ்ரீகணேசனுடைய My Choice மொழிபெயர்ப்புக் கவிதைகளும் அவற்றுள் அடக்கம். ஒவ்வோர் அமர்விலும் 78 கவிதைகள் வாசிக்கப்பட்டன. நான்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. முதல் நாள் பிற்பகல் சமந்தா இலங்கக்கோன் நிபுனிக்கா திலானியும் கவிதை படித்தனர். மாலை அமர்வில் கந்தையா ஸ்ரீகணேசன் கவிதை வாசித்தார்.

இரண்டாம் நாள் பிற்பகல் புது தில்லியைச் சேர்ந்த கவிதா சிங்கல் தலைமையில் கவிஞர் எண்மர் தம் கவிதைகளை அரங்கேற்றினர். ஸ்ரீலங்காவின் காஞ்சனா பிரியகாந்தா தலைமையில் "நியாயமற்ற இரண்டு போர்கள் குறித்த வேதனை" என்ற தலைப்பில் நான்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மூன்றாம் நாள் முற்பகல் கேரளத்தைச் சேர்ந்த பேராசிரியர் மு.ஏ.டொமினிக் தலைமையில் கவிஞர் எண்மர் தம் கவிதைகளை அரங்கேற்றினர். இவர்களுள் நேபாளிகள் மூவர் இந்தியர் மூவர். பூட்டான் கவிஞர் ஒருவர் மற்றும் நான். அன்றைய நிறைவு நிகழ்ச்சியில் மூவர் கலந்து கட்டுரைகள் படித்தனர். நான் சூஃபிகளையும் தமிழ்ச் சித்தர்களையும் ஒப்பிட்டு என் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தேன். கட்டுரைக்கு எதிர்பார்த்ததைவிட நல்ல வரவேற்புக் கிடைத்தது. இரு பேராளர்கள் கட்டுரைப் பிரதியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டனர்.

டிசெம்பர் 06ஆந் திகதி சுற்றுலாவுக்கு ஒதுக்கப்பட்டது. புது தில்லியிலிருந்து சில கிலோமீறர் தொலைவிலுள்ள ஹுமாயுன் சமாதிக்குச் சென்றோம். எங்களுக்கு வழி காட்டியாக வந்தவர் றொபின்ஸன் இறையியல், கலை விமர்சனம், தொல்லியல் உலாக்கள் என தம்பெயர் நிறுவியவர். சுவாரஸியமாகக் கதை சொல்லவல்லவர்.

2015 வாக்கில் சார்க் இலக்கிய விழாவுக்கு வந்தபொழுது ஆக்ராவிலுள்ள தாஜ்மஹாலைப் பார்ப்பதில் அரைநாள் கழித்தோம். தாஜ் உலகளாவிய பிரபலம் பெற்றது. சுற்றுலாப் பயணிகள் அதை மொய்ப்பார்கள். மும்தாஜ்க்காக ஷாஜஹான் எழுப்பிய சலவைக் கற்களாலான 'காதல் மாளிகை' அது.

ஹுமாயுன் சமாதி சற்று வித்தியாசமானது யார் இந்த ஹுமாயுன்? மொகலாயப் பேரரசர். 1534 தொடக்கம் 1556 வரை தற்போதைய கிழக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வட இந்தியா, வங்கதேசம் உள்ளிட்ட 10 லட்சம் சதுர கிலோமீற்றர் இராச்சியத்தை ஆண்டவர் ஹுமாயூன் நஜிமுதீன் முகம்மது அவருடைய மகன்தான் அக்பர். இவர் காலத்திலேதான் பாரசீகக் கட்டடக்கலை இந்தியாவுக்கு அறிமுகமானது. மொழியும் இலக்கியமும் செழித்தோங்கின. இந்தியாவில் கிடைக்கும் மிக முந்திய பாரசீக ஏட்டுச் சுவடிகள் இக்காலத்தவை.

அவருக்கு ஒரு நூற்றாண்டின்பின் வந்தவர் தான் ஷாஜஹான். யமுனைக் கரையில் ஆக்ராவில், தன் மனைவி மும்தாஜ் நினைவாக தாஜ்மகாலைக் கட்டியவர். தாஜ்மகால் பளிங்கினால் ஒரு மாளிகையாக நிமிர்ந்தது. எல்லாப் புகழையும் வாரிக் கொண்டாலும் தில்லியிலுள்ள ஹுமாயூன் சமாதி அடக்கமாக, கலையழகோடு அமைதியாக, கம்பீரமாக நன்கு பேணப்படும் சோலை சூழ தனக்கேயுரிய சாந்நித்தியத்துடன் பொலிவதை அங்கு நாங்கள் பிடித்த நிழல் படங்கள் காட்டும்.


ஹுமாயூன் சமாதிக்கு முன்

எட்டு ஆண்டுகள் சார்க் இலக்கிய விழாக்களில் கலந்து கொண்ட அநுபவம் என் படைப்புலகை அகலித்துள்ளது. சீதாகந்த் மகாபத்திர (ஒடிஸா) நூறுல்ஹுடா (வங்கதேசம்) அபி சுபேதி (நேபாளம்), வர்ஷா தாஸ் (இந்தியா) மு.ஏ.டொமினிக் (கேரளம்) ஆகியோர் எனக்கு அனுக்கராகியுள்ளனர். இலக்கியத்தின் பண்பும் பயனும் தாகூர் சொல்வது போல் சேய்மையில் உள்ளவற்றை அண்மையில் காண்பது தானே? தொடர்பாடல் மொழியாக ஆங்கிலம் இருந்ததால் இது சாத்தியமானது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கிட்டு என்றொரு பெருந்தளப

தீருவில்.
கடலென மக்கள். இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக் கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும் நிரவியும் மக்கள். நெஞ்சங்களில் கோபம், அழுகை, கண்ணீர். சோகத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எழுந்த சினம். அன்புக்குரியவனை இழந்து விட்ட தவிப்பு.
இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி. அதே தீருவில்.
கிட்டண்ணையும் அவர் தோழர்களும் கப்பலில்... படமாக... நம்ப முடியாத நிஜம்.
படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை.
தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.
அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன்தான்.
தேசம் அழுதது.
மக்கள் கூட்டம் தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்து கையசைத்தது. உறுதியான அசைவு. கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை.
"தலைவன் இருக்கின்றான்" கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.
ஐந்து வருடங்களுக்கு முன்பு,சுதுமலை அம்மன் கோவில் முன்றிலில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி.
தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.
"அடுத்ததாக, தளபதி அவர்கள் பேசுவார்!" மக்களின் ஆரவாரம், ஆர்ப்பரிப்பு.
அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு, உற்சாகம். அந்த ஆர்ப்பரிப்புக்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது; அப்படியே பதிந்தது.
"தலைவர் இருக்கிறார்; அவரை நம்புங்கள்" ஒரு தூய உள்ளத்தில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத் தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கின்றது!
கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடுகட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல.
தங்களுக்காகச் சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க எவருக்குமே காரணங்கள் தேவையில்லை.
கிட்டண்ணை சிறந்த ஒரு போராளி. வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர்; விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது. மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம்; வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப்போனது கிட்டண்ணையின் காலத்தில் தான்.
"கோட்டையில் இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம், அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.
'கிட்டர் நிற்கிறார்; இனிப்பயமில்லை.' மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு; மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.
பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும் அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை.
அந்தக் காலங்களில் தான் கிட்டண்ணை மக்களின் மனங்களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான அழிவற்ற வாழ்வு: கோபித்தாலும் சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு.
வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில் விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டு நடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது. கிட்டண்ணைக்கோ அப்படியில்லை. ஆனாலும் அந்த மாலை நேரங்களை அவர் விரும்பினார். அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவையில்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.
வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முடியப்பட்ட காற்சட்டைகளுடன் 'சிறிய கிட்டுகள்' நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் '357 மக்னம்' சுழற்துப்பாக்கியைப் போன்று இழுபட்டபடி வளைந்த தடி ஒன்று தொங்கும்.
கள்ளன் பொலிஸ் விளையாட்டெல்லாம் மறைந்து புலிகள் இராணுவ விளையாட்டுத் தொடங்கியிருந்தது.
விளையாட்டிலும் 'சின்னக் கிட்டுகள்' ஒரு நாளும் தோற்பதில்லை. வெற்றி; என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூடக் கிட்டு மாமா தோற்பதை அவர்கள் விரும்புவதில்லை.
இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால்தான் அவருக்கு ஆபத்து என்றபோது மக்கள் துடித்தனர்.
அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்தினருடன் நடந்த சண்டையொன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகிச் சில நாள்கள் சென்றிருந்தன.
அப்போதுதான் தேசவிரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டெறியப்பட்டது. குண்டு வெடித்தது தெரியும். ஆனால், கிட்டண்ணைக்கு என்ன நடந்தது என்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது. தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது. மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவித்தது.
உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனாலும், கவலை முற்றாகத் தீரவில்லை. ஏனெனில் கிட்டண்ணை ஒரு காலை இழந்திருந்தார்.
1987 மே நாள், மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்.
"கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்" மக்கள் முகங்களில் மகிழ்ச்சி; கிட்டண்ணையைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆவல்.
கிட்டண்ணை பேசினார். தரமானதொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு.
அன்று மக்களிடையே உற்சாகமும் மகிழ்ச்சியும் கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.
கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறுகணம் எங்கென்று தெரியாது மறைந்துவிடும் கோபம்.
தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும், ஒருவரும் கோபிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதுமில்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள் இருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.
சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவது தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும் அவர்கள் கண்டவர்கள். அதனால் தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானதே. இயக்கத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது.
கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும் திறமையும் மனிதர்களை வென்றன.
குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொதுவாகத் தவறுவதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களூர்ப் பெரியவர்கள் தங்களு
பெருமை. ஆபத்தான வேளைகளில்கூட ப
துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைக
துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒருபோதும்
இதெல்லாவற்றுக்கும் அவருடைய முதலா
நிற்கின்றது.
1983 , உமையாள்புரம்.
நிலக்கண்ணிகளைப் பொருத்தி விட்டு இரா
காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள்
வண்டிகள் வருவது தெரிந்தது.
கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்
காலம். இராணுவ வண்டிகளைப் பார்த்து ம
குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெ
புலிகள் வெவ்வேறு திசைகளால் பின்வாங்
ஓடினார்கள்.
வீதிக்கு அருகாகத் தண்டவாளம் இருந்த
வெட்டை. கவச வாகனங்கள் இரண்டு துப்
வீசிக் கொண்டு நெருங்கி வந்தன.
ஒருசிலர் விழலாம் என்ற நிலை. கிட்டண்ணை
திரும்பி தனது 'ஜி3'துப்பாக்கியால் கவசவாச
தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காய
துரத்தி வந்த வேகத்துக்குச் சரிந்து புரண்ட
அவரது முதலாவது களமும் சாதனை தான்
அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்
வீரத்தை வெளிப்படுத்தி நின்றது; பகைவர்
கிட்டண்ணை சிறந்ததொரு வீரன். அதைப்
தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன்
கமராவாக இருந்தாலும் சரி...
சிறந்ததொரு இலக்கியவாதி எழுத்தாளன்.
போர்முனையில் அவர்களின் வாழ்க்கை
தொட்டுவிடும் உணர்வோடு அவரின் எழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ராஜதந்திரம்: கைதிகள் பரிமாற்றம் தொடர்பான சிங்களப் படை அதிகாரிகளுடனான பேச்சுக்கள்.

# ...பதி

...ர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் ...ளைகளில்கூட பதற்றமற்று. நிதானமாகத் ...ார். சண்டைகளின்போது தேவையற்ற ...ர் ஒருபோதும் செய்ததில்லை.
...நடைய முதலாவது தாக்குதலே சான்றாக

...த்தி விட்டு இராணுவத்தினரின் வருகைக் ...ாத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ ...து.
...ாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாத ...ளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக் ...ண்ணிகள் வெடித்தன.
...ால் பின்வாங்கினார்கள், அல்லது தப்பி

...ாளம் இருந்தது. அதன் இரு பக்கமும் ... இரண்டு துப்பாக்கி ரவைகளை அள்ளி ...ந்தன.
...ல. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று ...யால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார். ...தின் சாரதி காயப்பட்டான். அவ் வாகனம் ...ரிந்து புரண்டது.
... சாதனை தான்.
...ன கண்ட ஒவ்வொரு களமும் அவரது ...றது; பகைவர்களைக் கலங்கடித்தது.
...ரன். அதைப் போன்றுதான், கமராவைத் ...டப்பிடிப்பாளன். அது தொலைக்காட்சிக் ...

... எழுத்தாளன். போராளிகள் தொடர்பாக, ...ன் வாழ்க்கை தொடர்பாக உள்ளத்தைத் ... அவரின் எழுத்துகள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும் நிதர்சன தரிசனமும் அவர் எழுத்துகளில் பரவிவிழும். எல்லாவற்றுக்கும் மேலாக அவரின் உயிர் போன்ற மக்கள் மீதான நேசம் அவர் எழுத்துகளில் பரிணமிக்கும்.

சரி. இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழந்து தான் போனோமா? உண்மைதான். ஏற்றுக்கொள்ளமுடியாத தெளிவான உண்மை.
"நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம் தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரிச்சயமானது. சாவைச்சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து. தளர்ந்து... எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்தமுடியும்?" மேஜர் அல்பேட்டின் இழப்பை அடுத்து அவரைப்பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.
நாங்கள் கூட ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில் எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று ஆயிரக் கணக்கான தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எங்கள் இதயங்கள் பல முறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புகளைத் தாங்க முடிவதில்லையே! அதிலும் கிட்டண்ணையை...!

1993 ஜனவரி .

'கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்துவிட்டார்களாம்' நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி. 'இந்தியர்கள் விடமாட்டார்கள். அதுவும் கிட்டண்ணையை நிச்சயமாக விடமாட்டார்கள்.'
'அணு அணுவாகத் திலீபன் சாகும்வரை பார்த்துக்கொண்டிருந்த இந்தியா; தமிழர்கள் துடிக்கையிலும் புலேந்தி அம்மானையும் குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரண வலைக்குள் சிக்கிவிட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது.' தெரிந்த செய்திதான். ஒவ்வொருவரின் மனமும் சொன்ன செய்தி.
அவர்களுக்குத் தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எதுவும் அமுக்கப்பட வேண்டும்; அழிக்கப்படவேண்டும். அதற்காக அவர்கள் என்னவும் செய்வார்கள்.
சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசுக்குத் தேவையற்றன. அதை மாற்றவும் திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும் மனச்சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வர்க்கத்துக்கு இயல்பாகவே இல்லை.
சரணடைவதா? அது புலிகளின் மரபு இல்லை. அதுவும் கிட்டண்ணை?தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி தமிழர்களின் மானச்சின்னம்அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன் தலைகுனிவது... சித்திரவதைப்பட்டு, அவமானப் பட்டுச் சாவது..
'கிட்டண்ணை காப்பாற்றப்படவேண்டும்.' தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக்கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

✦✦✦✦✦✦

"எமது சிறிய படகு அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால்,பெரும் நேவிப்படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக்கொண்டு பாய்ந்து வருகின்றன.
"அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச் சீறிக்கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.
"ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.
"நேவிப்படகிலிருந்து பாய்ந்து வந்த 'றேசர் ரவுண்ஸ்' ஒன்று எமது படகின் எரிபொருள் தாங்கியைத் துளைக்க... படகு தீப்பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகிறது.
"பருத்தித்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப்படுவதை அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பி வரும் என்று பார்த்துக் கொண்டிருக்க, எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.
"ஆனால், செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை; கடல்."
பல வருடங்களுக்கு முன்பு சிறிலங்கா கடற்படையால் எமது தோழர்கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்டபொழுது, 'திரை கடல் ஓடினோம் திரவியம் தேடி அல்ல' என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார்.

✦✦✦✦✦

ஆனால் இன்று...
1993 ஜனவரி 16
நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக்கப்பிடிக்குள் கிட்டண்ணை...
நாங்கள் செல்லமுடியாது. ஏன்?
கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க் கப்பல்கள். சரணடைய வேண்டும்; அல்லது அந்தப் பெரும் போர்க் கப்பல்கள், சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும். பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க் கப்பலைத் தாக்க வந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.
இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின் மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும்.
'சரணடையப் போவதில்லை.' சாவு நிச்சயமாகிப்போனது. ஆனால், அந்தச் சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்கவேண்டும்; சரித்திரம் படைக்க வேண்டும்; தாய் நிலத்தைத் தலை நிமிரச் செய்ய வேண்டும்.
சண்டைக்களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற நூற்றுக்கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று...
குட்டி சிறி அருகில் நின்றான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரியாளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை. அவன் அழுதிருப்பான்; தனக்காக அல்ல, கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒருபோதும் கலங்கியவனில்லை. இப்போது கலங்கி இருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லாரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.
இந்திய வல்லாதிக்கப்பேய்கள் இறங்கி வரப்போவதில்லை.
எங்கள் தொலைத் தொடர்புக்கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக் கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன்
சாவின் விளிம்பில்...
முடிவு உறுதியாகியது. ஒரு கணத்தில் கப்பல் சிதறும்; காணாமற் போகும்.
கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள்.
தேசம், அம்மா, அண்ணன், அன்பான மனைவி, தன்னில் உயிரை வைத்திருக்கும் தலைவன் எல்லோருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒரு கணம் வந்து விட்டுச் சென்றிருக்கலாம்; ஆனால் வெளித் தெரியாது.
விடைபெற்றிருப்பார்கள் தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து...
கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத்தொடர்புக்கருவி நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா... வருகிறதா...?
'கிட்டண்ணையை இழந்து விட்டோம்'
கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது; தவித்தது; கதறி அழுதது; ஒரு கணம் தயங்கி நின்றது.
தாங்க முடியாத இழப்பு.
எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்கமுடியாத இழப்புகள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் 'தலைவன் இருக்கிறான்' எனத் தொடர்ந்து செல்லும்.
அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்.

## உலகம் எப்போது ஊமையானது?

அசோகச்சக்கரம் குருதியில் குளித்தது.
வங்கமாகடல் தீயினில் கொதித்தது.
இந்திய வல்லூறுகளின்
கூரிய அலகுகள்
'ஒலிவ்' தளிர் சுமந்து வந்த
வெள்ளைப் புறாக்களை,
எப்படிக் குதறலாம்?
கிட்டுவும் குட்டி சிறியும்
எட்டு வேங்கைகளும்
வேடந்தாங்கல் தேடிவந்த,
வெளிநாட்டுப் பறவைகள் அல்ல...
தங்கள் கூடு திரும்பிய குருவிகள்.
'கோட்சே'கூட
தன்னை நியாயப்படுத்தினான்.
சிலர் ஏற்றும் கொண்டனர்.
இந்திய அரசே!
முகமூடி இழந்துபோன
உன் ஆதிக்க முகத்தையும்,
அகோரப் பற்களையும்
எந்த முந்தானையால் மூடப்போகிறாய்?
ஆசியக் கடலுக்குள்,
அகலக்கால் பரப்ப
உன்னை அனுமதித்தது யார்?
கேட்க யாருமே இல்லையா?
உலகம் எப்போது ஊமையானது?

புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திரா: கைதும் விடுதலையும்

○ கே.வி.தவராசா




### யாரிந்த சித்திரா ராஜேந்திரன்?

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சித்திரா தனது 15 ஆவது வயதில் டென்மார்க் நாட்டுக்குச் சென்று தனது சிறிய தாயாரின் பராமரிப்பில் தங்கியிருந்து டென்மார்க் அரசிடம் அகதி அந்தஸ்தையும் கோரியிருந்தார். இந்த நிலையில் 1995ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை Daisnh மொழியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இந்தக்காலப்பகுதியில்தான் இங்கிலாந்து, தமது நாட்டில் அகதி அந்தஸ்துக் கோருபவர்களுக்கான சட்டத்தையும் நிர்வாகத்தையும் பல புதிய விதிகளை உட்புகுத்திக் கடினப்படுத்தியது. இங்கிலாந்தைத் தொடர்ந்து ஜேர்மனி, நோர்வே, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடுகளும் அகதி அந்தஸ்துக்கோரும் சட்டங்களைக் கடுமையாக்கின. இக்காலப் பகுதியில் இந்நாடுகளிடம் அகதி அந்தஸ்துக் கோரியோர் (Asylum Seekers) தொகை 240,000 பேர். . இதில் இலங்கையைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்டோரும் இருந்தனர்.

### 13 துரதிர்ஷ்டமா?

பெரும்பான்மையான ஐரோப்பியர் மனதில் 13 என்ற எண் துரதிர்ஷ்டமானதாகக் கருதப்பட்டு வந்தது. இது சித்திராவின்வாழ்க்கையிலும்நிரூபணமாகியிருந்தது. 12 தமிழ் அகதிகளின் நிரந்தர குடியுரிமைக்கான விண்ணப்பங்கள் டெனிஸ் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் 13 ஆவது விண்ணப்பமாக சித்திராவின் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டு டெனிஸ் அதிகாரிகளினால் இரண்டு வாரங்களாக சித்திரா தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அத்துடன் சித்திராவின் மேன்முறையீடானது டென்மார்க்கின் குறைகேள் அதிகாரியின் (ombudsmna) இறுதி முடிவு வருவதற்கு முன்னர் டென்மார்க் அதிகாரிகள் இலங்கையில் எந்தப் பிரச்சினையுமில்லையென்றும், அகதிகள் திரும்ப அனுப்பப்படுவதனால் அவர்களுக்கு எந்த ஆபத்துமில்லையெனவும் தீர்மானித்து சித்திராவை இலங்கைக்கு அனுப்ப முடிவெடுத்திருந்தனர்.

சித்திராவின் கைதுக்கெதிராகவும் இலங்கைக்குத் திருப்பியனுப்பும் தீர்மானத்துக்கு எதிராகவும் சித்திராவுடன் ஒன்றாகப் பயின்ற மாணவ மாணவிகளாலும் கல்லூரி ஆசிரியர்களாலும் மனித உரிமை அமைப்புகளாலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டு, அது டென்மார்க் ஊடகங்களில் முக்கியமான செய்தியாகவும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சுயேச்சையான நிறுவனங்களாலும் நிதி சேகரிக்கப்பட்டு, சித்திராவின் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் டெனிஸ் அதிகாரிகள் சித்திராவை இலங்கைக்கு நாடுகடத்த முடிவெடுத்தனர். 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி சித்திராவை இரண்டு டெனிஸ் அதிகாரிகள் விமானம் மூலம் நாடுகடத்தி, இலங்கையின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்தபோது சித்திராவிடம் கடவுச்சீட்டோ, ஆள் அடையாள அட்டையோ இருக்கவில்லை. பிறப்பு அத்தாட்சிச் சான்றுப் பத்திரமும் டென்மார்க் குடியகல்வு - குடிவரவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவுப் பத்திரமும் மட்டுமே உடைமையில் இருந்தன.

சித்திரா இலங்கைக்கு நாடுகடத்தப்படும் தகவல் சித்திராவின் மாமனாருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் சித்திராவை அழைத்துச் செல்வதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு மாமனாரும் அவரது மகனும் வந்திருந்தனர். கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய அதிகாரிகளினதோ அல்லது பொலிஸ் அதிகாரிகளினதோ எந்த விதச் சோதனைக்கும் உட்படுத்தப்படாத சித்திரா, விமான நிலையத்திலிருந்து வெளியேறி அவரது மாமனாருடன் தெஹிவளையில் அமைந்திருந்த வீட்டை வந்தடைந்தார்.

### சித்திரா கைது

1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் திகதி தெஹிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் சித்திரா கைது செய்யப்பட்டு அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். இந்தச்செய்தி உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகள் இலத்திரனியல் ஊடகங்களில் முக்கியமான பேசுபொருளாக மாற, சித்திரா கைது விவகாரம் டென்மார்க்கின் பிரபலமான அனைத்து ஊடகங்களினதும் பத்திரிகைகளினதும் முக்கிய செய்தியாகியது. டென்மார்க் ஊடகவியலாளர்கள் நான்கு பேர் தகவல் சேகரிப்புக்காக உடனடியாக இலங்கை வந்தடைந்தனர். இந்நிலையில் சித்திராவின் உறவினர்களும் டென்மார்க்கில் சித்திராவின் அகதி அந்தஸ்து விண்ணப்பத்தை ஆதரித்து சித்திரா சார்பாக வாதாடிய டென்மார்க் நாட்டு சொலிசிட்டர் கிறிஸ்டல் பால்க்வொன்னர் (Daisnh soilcitor Christel FalkWonener) என்னையும் எனது துணைவியாரை யும் தொடர்பு கொண்டு சித்திராவின் விடுதலைக் கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

### விடுதலைப் புலிகளுக்கு டென்மார்க்கில் நிதி சேகரிப்பு

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மசிறி லியனகே மற்றும் பிரதம பொலிஸ் பரிசோதகர் தென்னக்கோன் ஆகியோருடன் இணைந்து தெஹிவளை பொலிஸாரால் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்று மேலதிக விசாரணைகளை நடத்தியது. சித்திரா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச ஊடகங்களும், மனித உரிமை அமைப்புகளும் சித்திராவிடமிருந்து எந்தவொரு தொடர்பும் கிடைக்காததால் பொலிஸ்மா அதிபரைத் தொடர்புகொள்ள எத்தனித்தன. இந்நிலையில் பொலிஸ் தலைமைக்காரியாலயத்திலிருந்து சித்திராவுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு இருப்பதாகவும்,சித்திரா தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக டென்மார்க்கில் நிதி சேகரிப்பதாக இன்டர்போல் பொலிஸாரிடமிருந்து நம்பகத்தன்மையுடைய தகவல் வந்துள்ளதாகவும் ,அந்தத் தகவலின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவதாகவும் காரணம் கூறப்பட்டது.

சித்திரா டென்மார்க்கை விட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு கைதான விடயம் டென்மார்க்கிலுள்ள பிரபல்யமான ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அது சம்பந்தமான செய்திகளை சேகரிக்க டென்மார்க்கிலிருந்து இலங்கை வந்தடைந்த [1] Ole Hoff Lund of TV 3 Dnemark, [2] Mortne Jastrup of the Information newspaper, [3] Nidgm Ue Mega of Politkne [4] Jensne Jens Mollen of TV 2 Dnemark ஆகிய நான்கு ஊடகவியலாளர்களும் அன்றைய தினமே தெஹிவளை பொலிஸ் நிலையம் சென்று சித்திராவை சந்தித்தனர். இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையென்று கூறி நாடுகடத்தப்பட்ட சித்திராவை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தமையையும் அதன் முழு விபரங்களையும் டென்மார்க் மேலும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள சகல ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்தனர். இச் செய்தி பல நாடுகளினதும் முன்னணி ஊடகங்களில் கவனம் பெற்றது.

### டென்மார்க் ஊடகவியலாளர்கள் கைது

1996ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் திகதி இலங்கைப் புலனாய்வுத் துறையினர் டென்மார்க் ஊடகவியலாளர்கள் தங்கியிருந்த இன்ரர்கென்டினல் (Hotel Intercontienntel), கிராண்ட் ஓரியண்ட் (Grand Orient Hotel) ஆகிய ஹோட்டல்களுக்குச்சென்று ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட உடைமைகளைச் சோதனையிட்டதுடன் நால்வரையும் கைது செய்து தடுத்து வைத்தார்கள்.


டென்மார்க் நாட்டின் ஊடகவியலாளர்கள் இலங்கைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி சர்வதேசரீதியில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடமிருந்தும் வாக்குமூலங்களைப் பெற பொலிஸார் நடவடிக்கை எடுத்த வேளையில் தாங்கள் வாக்குமூலம் அளிப்பதாகவிருந்தால் தங்கள் நலனைக் கவனிக்கும் சட்டத்தரணியின் முன்னிலையிலேயே வாக்குமூலம் கொடுப்போம் என்று அவர்கள் உறுதியாக இருந்தனர். இந்நிலையில் நான்கு பத்திரிகையாளர்களும் டென்மார்க் வதிவிடப்பிரதிநிதி (ConsulGeneral) பல்தி பிஜோன் ரஷ்முசேனைத் (Palte Bjonr Rasmussne) தொடர்புகொண்டு தங்கள் சார்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தங்கள் நலனை கவனிப்பதற்காகவும் என்னையும் எனது துணைவியாரையும் நியமிக்கும்படி வேண்டிக்கொண்டிருந்தனர். அதன்படி டென்மார்க் வதிவிடப்பிரதிநிதியின் வேண்டுகோளுக்கு இணங்க சித்திராவின் கைது, அவசரகால விதியின்கீழ் தடுத்து வைப்பு என்பவற்றுடன் நான்கு டென்மார்க் ஊடகவியலாளர்களின் நலனையும் கவனிக்கத் தொடங்கினோம். தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு ஊடகவியலாளர்களின் வாக்குமூலங்களும் எம் முன்னிலையில் பதியப்பட்டு தொடர்ந்தும் அவர்கள் கல்கிசை (Beach Way Hotel) பீச்வேய் ஹோட்டலுக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பலத்த பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களை உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களோ, மனித உரிமை ஆர்வலர்களோ சந்தித்தல் அல்லது நேர்காணல் செய்தல் அல்லது புகைப்படம் எடுத்தல் என்பன அன்றைய பொலிஸ்மா அதிபர் று.டீ.ராஜகுருவின் உத்தரவினால் தடுக்கப்பட்டன.

டென்மார்க் அரசு தனது அரச பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அந்தப்பிரதிநிதியுடன் மேலும் நான்கு ஊடகங்களின் பிரதான ஆசிரியர்களும் இலங்கை வந்து வெளிவிவகார அமைச்சுடன் பேச்சு நடத்தினர். அத்துடன் டென்மார்க்கின் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளரும் இன்னும் சில அரச அதிகாரிகளும் இலங்கை வந்து வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், புனர்வாழ்வு அமைச்சர்அஷ்ரப், பொலிஸ்மா அதிபர் ராஜகுரு ஆகியோரைச் சந்தித்து சித்திரா தொடர்பிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு ஊடகவியலாளர்கள் சம்பந்தமாகவும் பேச்சு நடத்தப்பட்டது. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர்களின் மனைவிமார் டென்மார்க்கிலிருந்து இங்கேயுள்ள வதிவிடப்பிரதிநிதியுடனும் என்னுடனும் எனது துணைவியாருடனும் தமது துணைவரின் நிலையை அறியும் பொருட்டு தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் திருப்திகரமான நம்பிக்கையூட்டும் தகவல்களை ஆறுதலுக்காக கௌரி சங்கரி வழங்கிக் கொண்டிருந்தார். அவர்களது தொலைபேசி அழைப்புகளுக்கு எந்நேரமும் பதில் அளித்ததோடு அவர்களை ஆசுவாசப்படுத்தும் செயற்பாட்டில் துளியளவும் அவர் குறை வைக்கவில்லை. வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகைகள், சுதந்திர ஊடக அமையம் (Free Media Movement) ஆகியன இந்தக் கைதுகளுக்கும் தடுப்புக் காவல் உத்தரவுக்கும் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சியை கைவிடலாகாது



தவளைகள் கூட்டமொன்று காட்டு வழியாக பயணித்துக் கொண்டிருந்தது. பெரிய அடர்ந்த காடு என்பதால் எல்லாத்தவளைகளும் கவனமாகவே பயணம் செய்தன.
திடீரென அப்போது அந்தக் கூட்டத்தில் இரண்டு தவளைகள் மட்டும் அந்தக் காட்டில் இருந்த பாதாளக்குழியில் தவறி விழுந்துவிட்டன.
செய்வதறியாது திகைத்து குழியின் பாதி வழியில் சிக்கித் தவித்து நின்று கொண்டிருந்தன மற்றத் தவளைகள்.
குழியின் மேல் சுற்றி நின்ற கூட்டாளிகள் குழியின் ஆழத்தை நன்றாக நோட்டமிட்டனர். அந்தக் குழியோ படுபயங்கர ஆழமாக இருந்ததால் அவைகளும் பயந்துவிட்டன.
உள்ளே விழுந்த தவளைகள் வேகமாக தவ்வி மேல வர முயற்சித்துக்கொண்டிருந்தன.
மேலே நின்ற தவளைகளோ சூழ்நிலையைப் பார்த்துவிட்டு இரு தவளைகளும் பிழைக்க வழியில்லை என்று முடிவு செய்தன. அதோடு நிற்காமல் அதனை வார்த்தைகளாக சத்தமாகச் சொல்லி கதற ஆரம்பித்தன.
இதனைக் கேட்டுக்கொண்டு செய்வதறியாது திகைத்த தவளைகளில் ஒன்று தவறி ஆழத்துக்கு விழுந்து இறந்தே போனது.
திடீரென்று கீழே விழுந்த தவளைகளில் ஒன்று மட்டும் சட்டென மேலே வந்தது.
அதிர்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்த மற்றத் தவளைகள்... "எவ்வாறு நீ தப்பினாய்???" என்று கேட்டன. தப்பிய தவளையோ. "எனக்கு இரண்டு காதுகளும் கேட்காது. நீங்கள் அனைவரும் என்னைத் தப்பித்து மேலே வருமாறு உற்சாகப்படுத்தியதால் மட்டுமே நான் பிழைத்தேன். ஆதலால் அனைவருக்கும் நன்றி" எனக் கூறிவிட்டு தன் பயணத்தைத் தொடர்ந்தது.

**நீதி: சில நேரங்களில் மற்றவரின் பேச்சை கேட்காமல் நம் முயற்சியை மட்டும் நம்புவதே நலம்!**

**N. அனிஸ்ராம்**
தரம் - 6B
யாழ்.மத்திய கல்லூரி

# வடக்கில்....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேய்ச்சல் தரைக்காகப் போராடும் விவசாயிகள் வெள்ளத்தில் நிற்கிறார்கள்:அவர்களுடைய நாட்டு மாடுகளை வெட்டிக் கொல்லப்படுகின்றன அல்லது சுருக்கு வைத்துப் பிடிக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாத ஓர் ஆளுநர்,காளை மாடுகளை அடக்கும் போட்டிகளை ஒழுங்குபடுத்துகிறார் என்ற விமர்சனங்களும் எழுந்தன.
செந்தில் தொண்டமான் ஆளுநராக நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்களைக் கவரும் விதத்தில் எதையாவது செய்ய முயற்சிக்கின்றார். எனினும் சிங்கள பௌத்தமயமாக்கலையும் நிலப்பறிப்பையும் அவரால் தடுத்துநிறுத்த முடியவில்லை.அதில் அவருடைய அதிகாரம் வரையறைக்கு உட்பட்டது என்பதனை பௌத்த மதகுருமார் நிரூபித்து வருகிறார்கள்.அவ்வாறு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத ஓர் ஆளுநர்.வெள்ள அனர்த்த காலத்தில். பெருமெடுப்பில். பெருந்தொகை நிதியைச் செலவழித்து. ஒரு பண்பாட்டு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்.அதில் அவர் கதாநாயகனாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.
எனவே கடந்த வாரம் வடக்கிலும் கிழக்கிலும் நடந்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால். மிகத் தெளிவான ஒரு செய்தி கிடைக்கின்றது. வடக்கில் ஜனாதிபதி பதின்மூன்றாவது திருத்தத்துக்குள் அதாவது மாகாண சபைக்குள் நிதி அதிகாரம் உண்டு என்று கூறுகிறார்.கிழக்கில் அவருடைய ஆளுநர் கதாநாயகனாக மேலெழுகிறார்.13ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் ஆளுநர் ஒருவர் கிழக்கில் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டும் விழாக்களை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.அதனால் அவருக்கு வரவேற்பும் கவர்ச்சியும் அதிகரித்திருக்கின்றன.13ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசின் பிரதிநிதியாக காணப்படும் ஆளுநர் ஒருவர் கதாநாயகனாக மேலுயர்ந்துள்ளார். அதன் மூலம் ஆளுநர் சக்திமிக்கவர் அவர் தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்பிக்கையூட்ட முயற்சிக்கப்படுகின்றது.
இவற்றின் மூலம் மாகாணசபையை ஒரு பலமான அதிகார கட்டமைப்பாக வெளிக்காட்டும் உள்நோக்கம் உண்டு.இதில் இந்தியாவை திருப்திப்படுத்தும் உள்நோக்கமுமுண்டு.வடக்கில் ஒரு சந்திப்பின்போது ஜனாதிபதி இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையிலான தரைப்பாலம் பற்றியும் பேசியிருக்கிறார். அவர் அதை நிறைவேற்ற மாட்டார் என்பது புத்திசாலியான யாருக்கும் விளங்கும்.ஆனால் அவர் அப்படிச் சொல்கிறார்.13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக முன்வைப்பதன் மூலம்,இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம்,கிழக்கில் பண்பாட்டு பெருவிழாவில் இந்தியாவின் உதவிகளை பெற்றதன் மூலம்.அவர் இந்தியாவை சந்தோஷப்படுத்த விளைகிறார். மாகாண சபைகளைப் பலமானவைகளாகக் காட்ட முயற்சிக்கின்றார்.











**தே.நாகவருண்**
தரம் - 3
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை



**கே.திசாரா**
தரம் - 2
யா/ ஆவரங்கால் நடராஜர் ம.வித்தியாலயம்



**சி.தேஜஸ்வி**
வளர்மதி முன்பள்ளி
கொக்குவில்



**அ.செனுரி**
தரம் - 3



**தருஷன் ஜதீஸ்வரன்**
வயது 7

மாணவர்களே!
நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 2



# உளர்ப்தினம்

○ இராகவன்

நாங்கள் நவம் மாஸ்ரரைத் தேடிக் கொண்டு ஏ.எல். வகுப்புக்குப் போனம், படிப்பிச்சுக் கொண்டு நிண்டவர் எங்களைக் கண்டுட்டு கூப்பிட்டுச் சேர்ட் பொக்கற்றுக்குள்ளால கவிதையை எடுத்துத் தந்தார். சுசிகுமார் அதை எதிர்பாக்கேல்ல. கவிதையை வேண்டிப் பாத்தம். கறுப்புப் பேனையால அச்சடிச்ச மாதிரி எழுதியிருந்தார். கவிதை இப்படித்தான் தொடங்கிச்சுது.

'எத்தனையோ இலக்கியங்கள் இற்றைவரை பார்த்தோம். அத்தனையும் இயற்கைமகள் அரணங்கின் ஆட்டம்..."

'சரியோடா?' எண்டு கேட்டார். "ஓம் சேர்! ஓம் சேர்! வெரி வெரி தாங்ஸ் சேர்!" எண்டு சுசிகுமார் என்னை முந்திக்கொண்டு சொன்னான். "சரியடா! சரி" எண்டு அவரும் சிரிச்சார். நானும் நன்றி சொல்லிப்போட்டு வந்தன். அண்டையிலயிருந்து சுசிகுமார் நவம் மாஸ்ரரின்ர பரம ரசிகனாகிவிட்டான்.

நான் நவம் மாஸ்ரரின்ர 'சுவாமி விபுலானந்தர்' என்ற கட்டுரையைத் தண்ணிபட்ட பாட்டில பாடமாக்கிக் கொண்டு கோட்ட மட்டப் போட்டிக்குப் போனன். அப்ப கோட்டமட்டத் தமிழ்த் தினப் போட்டி பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலையிலதான் நடந்தது. கட்டுரைப் போட்டிக்கு நிறையப் பேர் வந்திருந்தினம். எனக்கு ஒரே ரென்சனா இருந்திச்சுது.

22



நவம் மாஸ்ரர்


அங்கை கட்டுரைப் போட்டிக்குரிய நாலு தலைப்புகளையும் துண்டுகளில எழுதிச் சுருட்டிப் போட்டு, குலுக்கி, முன்னுக்கிருந்த ஒரு பொம்பிளைப்பிள்ளையை எடுக்கச் சொல்லிச்சினம். அதுகும் ஒரு சீட்டை எடுத்துக்குடுத்திச்சுது. அதை விரிச்சு ஒரு ரீச்சர் வாசிச்சா. 'சுவாமி விபுலானந்தர்' எண்ட தலைப்புத்தான் வந்திருந்தது. எனக்கு வலுபுளுகு. மளமள வெண்டு எழுதிக் குடுத்தன். இது காலமை நடந்தது. மதியத்துக்குப் பிறகு போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும் எண்டு அந்த ரீச்சர் சொல்லிப்போட்டு எல்லாற்ற கட்டுரையளையும் வாங்கி அடுக்கிக் கொண்டு போனா. எனக்குத் திரும்பவும் சரியான ரென்சனாயிருந்திச்சுது. நாளினி ரீச்சரும் சிவநேசன் மாஸ்ரரும் எங்கட பள்ளிக்கூடத்திலயிருந்து போட்டியளில பங்குபற்றுற பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு வந்தவை.

நாளினி ரீச்சர் 'என்னடா கட்டுரை வடிவா எழுதினனியா?' எண்டு என்னட்டக் கேட்டா. "ஏதோ என்னால முடிஞ்சளவுக்கு வடிவா எழுதியிருக்கிறன் ரீச்சர்" எண்டு சொன்னன். "சரி அவ்வளவுங் காணும், முடிவைப் பற்றி யோசிக்காதை. வாறது வரட்டும்" எண்டு சொன்னா. நான் ரென்சனாயிருக்கிறன் எண்டு அவவுக்கு விளங்கிட்டுது. மதியத்துக்குப் பிறகு முடிவு அறிவிக்கிற இடத்துக்குப் போனன். 'மத்திய பிரிவு கட்டுரைப் போட்டி முடிவுகள்' எண்டு ஒரு ரீச்சர் சொன்ன உடனையே கலகலப்பாயிருந்த இடத்தில மயான அமைதி நிலவிச்சுது.

(தொடரும்)

# அருவருப்பு...

○ தமயந்தி



## சஞ்சீவி சிறுகதை

என் மூத்தவள் கம்பஸ் தெரிவாகி விட்டாள். இனி அவளைப் பார்த்து மற்றவளும் படிப்பாள். எனக்குள் நம்பிக்கை நிறைந்து வழிந்தது.

பேரழகிகள் என்றில்லாவிட்டாலும் பெண்ணுக்குரிய இலட்சணங்கள் நிறையவே இருந்தன. மூத்தவள் என்னை போல என்றும், மற்றவள் என்ர மனிசி போல என்றும் ஊரார் சொல்ல நானும் கேட்டிருக்கிறேன்.

என்ர இரண்டு பிள்ளைகளும் படிப்பில மட்டுமில்லை விளையாட்டிலும் கெட்டிக்காரிகளாக இருந்தார்கள். என்னைப் போலவே நிமிர்ந்த நடை மற்றும் மிடுக்கான தோற்றம். என்னவளை போல அமைதியான சுபாவம் இருவருக்கும்.

பிள்ளைகள் ஒழுக்கமாக நடக்கவேண்டும் என்பதற்காக நான் ஏதோ கெட்டிக்காரன் போல சிலவேளை நடப்பதுண்டு. ஆண்கள் சிலரைப்பற்றி பிள்ளைகளிடம் அடிக்கடி குறைகள் சொல்லி எச்சரிப்பேன்.

'ராகுலன் அங்கிள் சரியில்லாதவர். அவர் வந்தால் எழும்பி உள்ளே போய்டோணும்'

'நிறஞ்சன் மாமாவை காதல் மன்னன் என்று ஊரில சொல்லுறவை. அவரை வழி தெருவில கண்டால் பார்த்தும் பார்க்காமல் வந்திடோணும்'

'இந்தப் பெட்டையை நான் காதலிச்சனான். அந்த பெட்டையோடு அண்டைக்கு தியேட்டருக்கு படம் பாக்க போனனான் எண்டு உவன் உங்கட வேல் அத்தான் பெட்டையள்பற்றி சொல்லிக்கொண்டு அலையுறவன். அவனோடு கதைக்கக் கூடாது'

இப்படி மற்றவர்கள் பற்றிப்பொல்லாத மற்றும் பொய்யான கண்டிசன்களை பிள்ளைகளிடம் சொல்லி வந்தேன். மற்றவர்பற்றி குறை சொல்லுவது என்ர பொதுவான குணம்தான். இவையெல்லாத்தையும் பிள்ளையள் நம்பிச்சிதுகளோ நம்பலையோ தெரியாது. ஆனால் என்ர மனிசி இதையெல்லாம் நம்பமாட்டாள்.

யாரைப்பற்றியும் யாராவது எந்தக் குறை சொன்னாலும் அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது. தானும் தன்ர வேலையும் என்று இருப்பாள்.

என்ர பிள்ளைகளும் என்னைவிட தாய்மேலதான் அதிக பாசமாக இருந்தார்கள். நான் குறையாகச் சொன்ன அத்தனை பேரையும் என்ர பிள்ளைகளுக்கு ரொம்ப பிடிக்கும் என்பதுதான் உண்மை. 'அவர்கள் நல்லவர்கள், அப்பா ஏன் அபாண்டமான பழிகள் சொல்லுகிறார்' என்றுதான் தாயிடமும் சொல்லுவார்கள். மற்றவர்கள் பற்றிக் குறை சொல்கிற என்னை, என்ர மனுசி பிள்ளைகளுக்கு பிடிக்கவே பிடிக்காது. பின்னை, அவை உவை என்று குறைகள் சொன்னால் ஆருக்குத்தான் என்னை பிடிக்கும்?

**என்ர இரண்டு பிள்ளைகளும் படிப்பில மட்டுமில்லை விளையாட்டிலும் கெட்டிக்காரிகளாக இருந்தார்கள். பிள்ளைகள் ஒழுக்கமாக நடக்க வேண்டும் என்பதற்காக நான் ஏதோ கெட்டிக்காரன் போல சிலவேளை நடப்பதுண்டு. ஆண்கள் சிலரைப்பற்றி பிள்ளைகளிடம் அடிக்கடி குறைகள் சொல்லி எச்சரிப்பேன்.**

பிள்ளைகள் குறுக்கால போடுவாளவை என்றுதான் நானும் ஆரையும் நம்பாமல் நடந்து கொண்டேன். ஒருநாள் வேல் வீட்டை வந்து கொண்டிருந்தான். 'பிள்ளையள், வேல் அத்தான் வாறான். உள்ளே போய் இருந்து படியுங்கோ' என்று நான் மெதுவாய் சொல்ல, மூத்தவள் புறுபுறுத்துக்கொண்டு உள்ளே போனாள். மூத்தவளை தொடர்ந்து இளையவளும் அப்பால் சென்றாள்.

'வாங்கோ, வேல். உதில இருங்கோ..!' என்று சொல்லி உள் விறாந்தையையும் இரண்டு அறைகளையும் நான் பார்க்கும்படியாக எழும்பி அந்தப் பக்கம் அமர்கிறேன். வேல் எனக்கு முன்னால் அமர்கிறான். அவன் அப்படி அமர்ந்தால் எங்கட படலையும்,தெருவால போற ஆக்களின்ர கால்களையும்தான் அவனால் பார்க்க முடியும்.

இப்ப எனக்குள்ளே ஒரே மகிழ்ச்சி. நான் ஏதோ கெட்டித்தனமாக நடந்து கொண்டதாகவும் எனக்குள்ளே பெரு நெகிழ்ச்சி. இருவரும் கனநேரமாக உரையாடிக்கொண்டிருந்தோம்.

மற்றொருநாள் என்ர மனிசியும் மூத்தவளும் மோட்டார் சைக்கிள் காற்றுப் போய் உருட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ரயர் பஞ்சரான இடம் ஒரு பெருவெளி. வழியால் போய் வாற ஒருத்தர் கூட அவர்களிடம் ஒரு கதைகூட கேக்கவில்லை.

'அம்மா, அவதானிச்சியளே ஒருத்தர்கூட எங்களை என்ன ஏதென்று கேக்காமல் போறதை'

'எல்லாம் கொப்பற்றை குணமறிந்துதான்' என்ர மனிசி சொல்லி முடித்திருக்கிறாள். மூத்தவள் பேசாமலே வந்தாள்.

அந்தவெளியின் காவாசித்தூரம் வர, நிரஞ்சன் மாமா 'வெகோ' பைக்கில வந்து 'ஏன்? என்ன பிள்ளை என்ன நடந்தது?' என்று கேட்க, பிள்ளை விடயத்தை சொல்லியிருக்கிறாள்.

'சரி, இப்ப நீங்கள் இரண்டு பேரும் இதில வீட்டை போய் சேருங்க. நான் இதைச் சரி செய்து கொண்டு வாறன்'

இந்தச் சம்பவம் கன நாளைக்குப் பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. எனக்குள்ளே வாழும் அந்த வஞ்சகத்தீ அனல் பரப்பி என்னை எரித்துகொண்டிருந்ததை உணரத்தொடங்கினேன்.

இன்னொருநாள், ராகுலன் எங்கட வீட்டுக்கு வந்து நின்று எனக்கு கோல் எடுத்தான். நான் சொன்னேன்,

'நான் அச்சகத்தடியில நிக்கிறன், வீட்டை வர கொஞ்சம் நேரம் செல்லும்'

'நான் உள்ளே இருக்கிறன்' என்று ராகுலன் சொன்ன போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது, என்ர மனிசியும் இளையவளும் கோயிலுக்குப் போட்டினம் என்று. உடனேயே 'நாளைக்கு வாறன் அண்ணை' என்று அச்சகக்காரனுக்கு சொல்லிவிட்டு வலு வேகமாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்தன்.

வீட்டை வந்து படலையை திறந்து உள்ளே போகிறேன். 'என்ர மூத்தவள் ராகுலன் அங்கிளுக்கு கொடுக்க என்று, அடுப்படியில் தேத்தண்ணி ஆத்திக்கொண்டு நின்றாள்.ராகுலன் மேசை மேலே இருந்த புத்தகம் ஒன்றை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தான்.

என் இதயப்பக்கமாக தொட்டு பாக்கிறன், அது வேகமாக துடித்துக்கொண்டிருந்தது.

எனக்கே என்மீது அருவருப்பாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org